1-1-58

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF
16 JAN 1958
MADRAS
271/1958
38

செய்திகள்

பரிசுப் போட்டி

குழந்தை எழுத்தாளர்களை ஊக்குவிக்கத் தென்னிந்திய மொழிப் புத்தகக் குழுவினர் (Southern Languages Book Trust) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளில் போட்டியை ஏற்படுத்தியுள்ளனர். வயது வாரியாக 3-6, 6-9, 9-12, 12-15 என்ற நான்கு பகுதிகளுக்கும் எட்டுப் பரிசுகள், கற்பனைகளுக்கு ஒன்று. உண்மையை ஆதாரமாகக் கொண்ட (சரித்திர, விஞ்ஞான சம்பந்தமான) விஷயங்களுக்கு ஒன்று என ஒவ்வொரு பகுதிக்கும் இரண்டு பரிசுகள் வீதம் அளிக்கப்படும். இவைகள் பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் சதர்ன் லாங்குவேஜஸ் புக் டிரஸ்ட், 3, வீட்கிராப்ட் ரோடு, நுங்கம் பாக்கம், சென்னை-31 என்ற விலாசத்துக்கு அனுப்பப் படவேண்டும். மற்ற விவரங்களுக்கும் மேலே கண்ட விலாசத்துக்கே எழுதலாம்.

குழந்தைப் படம்

குழந்தைகள் பிலிம் சங்கத்தார் தயாரித்த 'கலங்கரை விளக்கம்' என்ற குழந்தை (தமிழ்) ஸினிமாப்படத்தின் முதல் காட்சியை புதுடில்லியில் மத்திய சர்க்கார் நிதிமந்திரி ஆரம்பித்து வைத்தார். 'ஜலதீப்' என்ற ஹிந்திப் படத்தின் தமிழ் வாசகமே இது; வெனிஸில் நடந்த சர்வ தேச ஸினிமாப்பட விழாவில் சிறந்தது என்று முதல் பரிசு பெற்ற படம்.

தேனம்பேட்டை

காங்கிரஸ் பொருட்காட்சியில்

கலைமகள்

கண்ணன்

ஸ்டால்

...ண்ணன் வெளியீடுகள் அனைத்தும்

...ங்கே கிடைக்கும். அவசியம்

...ம் செய்யுங்கள்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 9 இதழ்: 1

1-1-'58

குழந்தைகளே! பக்கம்	2
காளிகோட்டை ரகசியம்...	3
இனும் வேடிக்கை! ...	9
சுதந்தர ஜோதி ...	12
நஷ்டம் யாருக்கு? ..	16
அநுராதபுரம் ...	19
கவியரங்கம் ..	23
நீங்களும் நானும் ..	24
மெய்ப்பொருள் நாயனர்...	25
கடற் புலி ..	27
ஹம் பஞ்சி ஏக் வால்கே!..	29

அட்டைப் படம்:

போட்டோ: புஷ்பத்துறை சுப்பிரமணியம்

செய்திகள் - 2-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

211812

குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் கண்ணனுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கண்ணனுக்கு எட்டு ஆண்டுகள் நிறைந்து, ஒன்பதாம் ஆண்டு பிறந்திருக்கிறது. எட்டு ஆண்டுகளாக, கண்ணனோடு நட்புப் பாராட்டி வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு புது ஆண்டிலும் உங்கள் அன்பையும் நட்பையும் தொடர்ந்து அளித்துவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் புத்தாண்டு இதழில் புதிய சரித்திரத் தொடர்கதையான 'காளிகோட்டை ரகசியம்' ஜாம் ஜாம் என்று தொடங்குகிறது. உங்களுடைய அபிமானத்தைப் பெற்ற எழுத்தாளர் 'ஜனு'வின் இந்தப் புதிய தொடர்கதை அவருடைய மற்றக் கதைகளையெல்லாம்விட விசேஷமாக அமைந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அழகான தமிழ் நடையும் அற்புதமான கதையும் சேர்ந்த அரிய படைப்பாக விளங்குகிறது காளிகோட்டை ரகசியம். ஆரம்பம் முதலே அதைப் படிக்குமாறு உங்களை அழைக்கிறேன். நடுவில் படித்துவிட்டு, பிறகு கதைத் தொடக்கத்திலிருந்து கண்ணன் இதழ்களை அனுப்புங்கள் என்று தயவுசெய்து கேட்காதீர்கள். முதலிலிருந்தே படித்து அவ்வப்போது உங்கள் அபிப்பிராயத்தையும் எனக்கு எழுதுங்கள். உங்களுக்குத் தேவையான பிரதிகள் உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கிடைக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறோம். இனி உங்கள் ஊரில் 1, 15 தேதிகளிலேயே தவறாமல் கண்ணன் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இதழில் பரிசுத் தொடர்கதையின் முடிவை அறிவித்துவிடலாம் என எண்ணியிருந்தேன்; இயலவில்லை. காரணம், கதைகள் அதிகமாக வந்திருப்பதுடன் அதிக அளவில் படிக்கும்படியும் நேர்ந்திருப்பதுதான். இந்த ஆண்டும் போட்டி மிகக் கடுமையாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. இதைத் தெரிவிப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று எண்ணுகிறேன். எப்படியும் பொங்கல் இதழில் பரிசு பெற்ற கதை ஆரம்பமாகிவிடும். அதுவரையில் முடிவு தெரிந்துகொள்ளத் துடிக்கும் ...ள் ஆவலை அடக்கி வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

...ல் இதழில் கண்ணன் பக்கங்கள் கொஞ்சம் கூடுதலாக ... ழநீளக் கதை ஒன்றும் அதிலே இடம் பெற்றிருக்கும். ... எட்டு வயதுக்குட்பட்டவர்களுக்காக ஒரு தனிப்பகுதி ... மான அம்சங்களும் பொங்கல் இதழில் ஆரம்ப... ...க்கொள்கிறேன்.

—ஆசிரியர்.

காளிகோட்டை ரகசியம்

‘ஜனு’

1. காளிகோட்டை

அழகுக் கோலமிடும் நீண்ட கடற்கரை ‘ட’னாவைப் போல் திரும்பியிருந்தது. மணல் மேடிட்ட அந்த இடத்தை ஒட்டி அடர்த்தியான காடு. அந்தக் காட்டுக்கு வகிடு எடுத்தது போல் குறுக்கே ஓர் ஆறு. அந்த ஆற்றின் கரையோடு வெகு தூரம் வரைக்கும் அங்கங்கே குப்பல் குப்பலாகச் சிறு சிறு ஊர்கள்; குன்றுகள். குறுக்கும் நெடுக்குமாக அந்தச் சிறு ஊர்களை இணைக்கும் வண்டிப் பாதைகள். எல்லாப் பாதைகளின் சுவடுகளும் போய்ச் சேருகிற பெரிய சாலைதான் காளி கோட்டைக்குப் போகும் முக்கியமான பாதை.

காட்டுக்கு நடுவே, ஆற்றை இணைக்கும் அகழி சூழ, கம்பீரமாக எழுந்து நின்றது காளிகோட்டை. ஒரு காலத்தில், பாறைகளும் புதர்களுமாக இருந்த அந்த இடத்தை அழித்து, அந்நியர்கள் யாரும் அடியெடுத்து வைக்க முடியாதபடி அந்தக் கோட்டை கட்டப்பட்டிருந்தது. அதை யார், எப்போது கட்டினார்கள் என்பதையெல்லாம் சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் அநேகமாக மறந்துகூடப் போய்விட்டார்கள்.

ஆம்; அவர்கள் அப்படி மறக்கத்தான் எண்ணினார்
தங்கள் குழந்தை குட்டிகளுக்கு உண்மையான விவ
சொல்லாமல் மறைத்து வைக்கத்தான் விரும்பினார்க
மையைத் தெரிந்துகொண்டு அவர்கள் வீண் வம்புக
கொள்ளப் போகிறார்களே என்று பயந்தார்கள்.

ஆனால் உண்மையை மறைத்துவிடலா
மாற்றிவிட முடியுமா? எப்படியோ
யாமல் பரவிக்கொண்டுதான் இ
இருக்கட்டும்.



இப்போது வானளாவ உயர்ந்து நிற்கும் அந்த உன்னதமான கோட்டை சின்னக் காளி வேங்கையார் என்ற பாளையக்காரரிடம் இருந்தது. பாளையக்காரர் என்றால் சிற்றரசர்கள் போன்றவர். அவர்கள் பெரிய அரசனுக்குமட்டுமே கட்டுப்பட்டவர்கள். ஆனால் சர்வ சுதந்தரமும் உள்ளவர்கள். சண்டை, படையெடுப்பு என்று ஏற்பட்டுவிட்டால் அவர்கள் படைகளைத் திரட்டி அரசனுக்கு உதவியாகப் போரிடுவார்கள். அப்படிப்பட்ட பாளையக்காரரில் காளி கோட்டைப் பாளையக்காரர் மிகமிக முக்கியமானவர். காரணம் காளிகோட்டை எதிரிகளை முறியடிக்கும் வலிமை மிகுந்த கோட்டை. சோழ அரசனுக்கே அந்தக் கோட்டை என்றால் உயிர் நாடிபோல. அதைத் தாக்கவோ, தகர்க்கவோ யாரும் துணிந்ததேயில்லை. அதுவும் பெரிய காளி வேங்கையார் இருந்தபோது சோழ அரசர் அங்கே பத்து நாட்கள் வந்துதங்கியிருந்தார். அரசரும் பாளையக்காரரும் காட்டிலே துஷ்ட மிருகங்களை உல்லாசமாக வேட்டையாடப் போவார்கள். பெரிய காளி வேங்கையாரின்

வீரத்தையும் பெருந்தன்மையையும் கண்டு அரசர் எத்தனையோ முறை வியந்து பாராட்டியிருக்கிறார். அவருக்கு ஒரு மகன் பிறந்தபோது அரசர் பத்துக் குதிரைகள்மீது பரிசில்கள் அனுப்பித் தம் அன்பைக் காட்டினார்.

அப்படி அரசரின் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரியவராக இருந்த பெரிய காளி வேங்கையாரின் எதிர் பாராத முடிவு சோழ நாட்டுக்கே ஓர் அதிர்ச்சியைத் தந்தது. அவருடைய முடிவு இயற்கையான முடிவு அல்ல என்று மட்டும் குடிமக்கள் அனைவரும் கருதினார்கள். பெரிய காளி வேங்கையார் மகன் சின்னஞ்சிறு பாலகனாக இருந்ததால், பெரிய வேங்கையாரின் ஒன்றுவிட்ட சகோதரரான சின்னக் காளி வேங்கையார் பாளையக்காரர் பதவியை மேற்கொண்டார். குடிமக்களுக்கு அவரிடம் அத்தனை நம்பிக்கையில்லை. அவருடைய சூழ்ச்சியால்தான் பெரிய காளி வேங்கையார் பலியானார் என்று அவர்களுக்கு ஓர் அவநம்பிக்கை அவரிடம் இருந்தது. ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உள்ளத்துக்குள்ளேயே குமைந்தார்கள்.

கொஞ்ச நாளில் பெரிய காளியார் மனைவியும் காலமாகவே அவர்கள் சமுசயம் வலுத்தது. கோட்டை வட்டாரமெங்கும் லேசான முணுமுணுப்பு எழுந்தது.

ஆனால் அது கணவனை இழந்த சோகத்தால் ஏற்பட்ட
முடிவு என்பது தெரியவே
கள் முணுமுணுப்பை
கொண்டார்கள்.

குழந்தை ப
பாலகனாக இருந்தமையால், அவனுக்கு ஒரு செ
தார் சின்னக் காளியார். அந்தச் செவிலி
சொந்த ஊருக்கெல்லாம் கூட குழ
வருவதுமாக இருந்தாள். ஒரு
எடுத்துக்கொண்டு தன் ஊருக்குச்

அங்கே போன சில நாளைக்கெல்லாம் அந்தக் குழந்தை நோய் கண்டு இறந்து போய்விட்டதாகச் சேதி வந்தது. சின்னக் காளி வேங்கையார் தகவல் எட்டியபோது சபை கூடியிருந்தார். அதைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தார். நம்ப முடியாமல் கலங்கினர். ''ஏமாற்று, பொய், சூது, வஞ்சகம்!'' என்று கோட்டையில் ஏறி முழக்கினர். குழந்தைக் காகக் குமுறினர்; அழுதார். பிறகு தகுந்த ஆட்களை அடக்கம் செய்ய அனுப்பினர்.

அவர் படுத்திய பாட்டில் யாருக்கும் அவர்மீது பழி சுமத்த இடம் ஏற்படாது என்று எண்ணிக்கொண்டார். முதலில் பெரிய பாளையக்காரர் மனைவி இறந்தபோது சந்தேகப்பட்டு எழுந்த முணுமுணுப்பு வீணுகிவிட்டதால் குடிமக்கள் அனைவரும் இப்போது வாயை மூடிக்கொண்டு இருந்தார்கள்.

சின்னக் காளி வேங்கையார் உரிமைப்படி பட்டம் கட்டிக் கொள்ள வேண்டியவர். ஆயினும் இதெல்லாம் நடந்து ஏழு ஆண்டுகள் ஆகியும் அவர் பட்டம் சூட்டிக்கொள்ள விரும்ப வில்லை. பிறர் வற்புறுத்த வற்புறுத்த அவர் பிகு அதிகமாகிக் கொண்டிருந்தது; பட்டம் கட்டிக்கொண்டாலும் கட்டிக் கொள்ளாவிட்டாலும் அவருடைய அதிகார பதவியை அபகரித் துச் செல்லப் போகிறவர்கள் யார்? எனவே, அந்தத் துணிச்சல் காரணமாகவோ, என்னவோ, அவர் கோட்டையின் தலைமைப் பதவியை மட்டும் வகித்தார். பட்டம் சூட்டிக்கொள்ளும்படி சோழ அரசர் வற்புறுத்தட்டும் என்று அவர் தமக்குள் எதிர் பார்த்துக்கொண் டிருந்தார். ஆனல் என்ன காரணத்தாலோ சோழ அரசர் இந்த விஷயத்தில் வாயைத் திறக்கவேயில்லை.

அதிலிருந்து அவர் சின்னக் காளி வேங்கையாரைப் பதவி யில் வைக்கவும் விரும்பவில்லை, அவரைப் பகைத்துக்கொள்ள வும் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

கங்கத்திலிருந்தும் கடாரத்திலிருந்தும் சாவகத்திலிருந் தும் ஈழகத்திலிருந்தும் கடல் வழியே கலத்தில் கற்பாறைகள் கொணர்ந்து கட்டிமுடித்த காளிகோட்டையில், புலி அமர்ந்த புலியாசனத்தில், சின்னக் காளி வேங்கையார் பூனைபோல ஏறி அமர்வதா என்று சோழ அரசர் வாளா விருந்திருக்கக் கூடும். ''ஆனல், அந்த அரசரையும் பணிய வைக்கிறேன்; அதுவும் வெகு விரைவில்!'' என்று மாரைத் தட்டி மீசையை முறுக்கிக் கொண்டார் சின்ன வேங்கையார். அவர் கண்களிலே கனல் பொறியும் கருத்திலே அனல் பொறியும் வீசின.

அந்தச் சில ஆண்டுகளுக்குள்ளே, வீரம் விளைத்த காளி
...டை மக்கள் வாயைத் திறக்கவே வகையற்று நின்றார்கள்.
...வலும் கெடுபிடியும் வலுத்து, வளர்ந்தும் விட்டன.
... வேங்கையார் பெயரைச் சொல்லவோ, அவர்
...பற்றிப் பேசவோ, எண்ணவோ யாருக்கும்
...று குடி மக்களுக்கும் கோட்டைக்கும்
... அகலமாகவும் ஆழமாகவும் வெட்டப்
...் காவல் போக்கே மாறிவிட்டது.
...ள்ளே நுழையவும் முடியாது;
... இந்த நிலையில் ஒரு நாள்,—

2. மானும் வேங்கையும்

எத்தனை அழகான புள்ளிமான் அது! அதைத் துரத்திக் கொண்டு அந்தக் காட்டினுள்ளே சுற்றிச் சுற்றி வந்தான் ஒரு சிறுவன். அவனும்தான் எத்தனை அழகாக இருந்தான்! அவனுக்குப் பத்து வயதுக்கு மேல் சொல்லமுடியாது. ஆயினும் பதினலு வயதுச் சிறுவனுக்குரிய வளர்ச்சியும் உடல் கவர்ச்சியும் கொண்டிருந்தான் அவன்!

புள்ளிமான் அவனுடைய சொந்த வளர்ப்பு மான்தான்; ஆனல் என்ன சொந்தமானலும் விளையாட்டில் விட்டுக்கொடுக்காமல் அது அவனை முள்ளிலும் புதரிலும் இழுத்து அடித்து, பள்ளத்தையும் பாறைகளையும் சுற்றவைத்து, அவன் கைப் பிடியில் அகப்படாமல் துள்ளித் துள்ளி ஓடிக்கொண் டிருந்தது.

''ஞொய்!''—

துள்ளிப் பாய்தோடிய புள்ளிமான் துணுக்குற்று நின்றது.

குறி தவறிய கூரிய அம்பு ஒன்று அதன் முன்னே தரையில் பாய்ந்து நின்றது. ஆசையோடு கொஞ்ச வரும் மனிதர்களைக் கண்டாலே அஞ்சுகின்ற குணம் படைத்த மான், அம்பு எடுத்து, கணை தொடுக்க வரும் அந்நியர்களைக் கண்டுவிட்டால் மருண்டு நிற்கக் கேட்கவா வேண்டும்?

ஆம்; வானளாவிய மரங்களுக்கு இடையே சென்ற ஒற்றையடிப் பாதையிலே சிலர் வில்லும் கையுமாக வளைந்து நின்று கணை தொடுக்கக் குறி பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

மான் மருண்டு நிற்பதைக் கண்ட சிறுவனும் மருண்டு, சீறி வந்த அம்பைத் தொடுத்த துஷ்டன் யார் என்று பார்க்கத் திரும்பினன். அப்படித் திரும்பியவன் கண்களிலே திகில் பரவியது. அவர்கள் காளிகோட்டையின் வேட்டையாட்கள் என்பதைக் கண்டுகொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை. ஒருவன் இல்லை; மூவர்! அந்தச் சிறுவனை அவர்களும் பார்த்து விட்டார்கள். அதனல் சிறிது தயங்கி நின்றூர்கள். என்ன தான் வலிமை படைத்திருந்தாலும், பிறர் பொருளைத் தாக்குவது என்பது ஒரு நொடியாவது தயங்க வைக்காமலா போகும்?

''முட்டாள்கள்! ஏனடா தயங்கி நிற்கிறீர்கள்? நகருங்கள் அப்பால்! குறி பார்த்து அடிக்கத் தெரியாத கோழைகளே! உம்; நகருங்கள் அப்படி!'' என்று பின்னலிருந்து மிடுக்கான குரல் ஒன்று கேட்டது.

சிறுவன் புதர் மறைக்காதபடிச் சுற்றிப் பக்க... சின்னக் காளி வேங்கையாரின் சாம்பல் வர்ணக் குதிர்கள்... லகானை வெட்டியிழுத்த வேகத்தில், 'ஙங ஙை' ... முரண்டியது தெரிந்தது. அவரே உடனே ... கீழே இறங்குவதையும் அவன் கண்ட...

உள்ளம் நடுநடுங்க, அவன் க... அடி எடுத்து வைத்தன. சின்னக்...

ரைக் கேட்டாலே சிம்ம சொப்பனம் காண்பதுபோல் நடுங்கும் குடி மக்களிடையே அவனும் ஒருவன்தானே! நேரிலேயே அதுவும் நேருக்கு நேர் பார்த்துவிட்டால் கேட்பானேன்? அவன் நின்றதே பெரிய காரியம்தான். மற்றொரு சமயமாக இருந்தால் அவன் சிட்டாகப் பறந்து ஓடி மறைந்திருப்பான். ஆனால் ஆபத்தில் சிக்கிக்கொண்டுவிட்ட மானை விட்டுவிட்டு அவன் எங்கே ஓடுவது?

சின்னக் காளி வேங்கையார் சிங்கம்போல நின்று ஒருமுறை கம்பீரமாகக் கனைத்துக் கொண்டார். அவரை யறியாமலே அவர் முகம் கடுமையாக மாறியது; கண்கள் சிவந்தன; மீசை துடிதுடித்தது. இடது கையிலே வில்லினை ஏந்தி, அலட்சிய மாக வலது கையினால் கூரிய அம்பினை உருவி எடுத்தார்.

மான் சிறுவனுக்குப் பக்கத்தில் நின்றது. வாய்ப் பேச்சு எழும்பாமல், சிறுவன் அதனைக் குனிந்து அணைத்துக்கொண்டான்.

''ஐயோ, வேண்டாம், வேண்டாம்!'' என்று முகத்தைத் திருப்பாமலே கூவினான். அவன் குரலிலே தாபமும் ஏக்கமும் கலந்து அந்தக் காட்டிலே எதிரொலித்தன.

''பயலே! எழுந்து ஓடிப்போ!'' என்று வேங்கையாரின் காவலாள் எச்சரிக்கை விடுத்தான்.

''முட்டாள்! மூடுடா வாயை! அந்த மானையும் அந்தப் பயலையும் ஒரே கணையில் கோத்து விடுகிறேன், பார்!'' என்று சொல்லிக்கொண்டே வேங்கையார் உதட்டைக் கடித்துக் கொண்டு வில்லை நாணேற்றினார்.

''என் மான்! நான் வளர்க்கும் மான்!'' என்று வாய் அரற்ற, கண்களை இறுக மூடிக்கொண்டான் சிறுவன்.

அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். சீறிச் சினந்து வரும் அம்பு நாணை விட்டுப் புறப்பட்டிருக்குமோ!

அது தெரியாது அவனுக்கு! ஆனால் ஏதோ ஓர் அம்பு சீறிக்கொண்டு சென்றது மட்டும் அவனுக்குத் தெரிந்தது. அந்த அம்பு ஏன் அவர்களை வந்து இன்னும் தாக்கவில்லை? சிறுவன் கண்களைத் திறந்தான்; திரும்பினான். அங்கே வேங்கை யாரின் கையிலே இருந்த வில்லைக் காணோம்! அவர் மரத்தோடு மரமாகக் கையைத் தூக்கிக்கொண்டு நின்றார். அவரோடு வந் திருந்த துணையாட்கள் மூவரும் கலவரக் குறியோடு ஈசானிய மூலையைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

''மரியாதையாக விற்களைத் தூக்கி இப்படிப் போடுங்கள்! ...யோ, வேங்கையாரின் நெஞ்சிலே பாய்ந்துவிடும் இந்த ... ஈசானிய மூலையில் நின்ற ஓர் இளம் காளை கையிலே ...வுடன் அலட்சியமான குரலில் அவர்களை நோக்கி ...டிருந்தான்.

...ாட்கள் மூவரும் மறு பேச்சின்றி அவனுடைய ...ட்டார்கள். வேங்கையார் தூக்கிய ...களை உறுத்துப் பார்த்தார்.

(தொடரும்)

இனாம் வேடிக்கை

சாமு

முனியன் இரண்டு ரூபாய் நோட்டைச் செல்லாயியிடம் வாங்கிப் புதிதாக வாங்கிய பர்ஸிலே வைத்து, சட்டையில் போட்டுக்கொண்டான். மறுநிமிஷம் பட்டணம் சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிட்டான்.

அவன் பட்டணத்திற்குப் புதிது. அவனுடைய பெரிய அண்ணன் பட்டணத்திலே ஏதோ தொழிற்சாலையில் வேலை செய்கிறான். அவன் அடிக்கடி வற்புறுத்தி அழைக்கவே முனியனும் செல்லாயியும் பட்டணத்துக்கு வந்தார்கள்.

அவன் ரெயில் நிலையத்திலிருந்து இறங்கியவுடன் பட்டணத்தின் மினுமினுப்பைக் கண்டு 'ஆ'வென வாயைப் பிளந்துவிட்டான். அன்றைக்கு மாலை தானே புறப்பட்டுப் பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான்.

மாலை மணி ஐந்து என்றால் மவுண்ட் ரோட்டிலே கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா? கூட்டம் 'ஜேஜே'வென்று இருந்தது. ''அடேயப்பா! எல்லைக் காளியம்மன் உற்சவத்துக்கு வர கூட்டம் கணக்கா எத்தனை பேர்?'' என்று அதிசயித்தான். ''பயாஸ்கோப் (சினிமா) ஏதாவது போவலாமா?'' என்று எண்ணினான்.

'சே! அதற்குப் பணமல்லவா வேண்டும். பயாஸ்கோப் வேண்டாம்!'

ஆமாம், அவனுக்குக் காசு செலவழிப்பதென்றால் மனசு வராது. தன் முரட்டுச் சட்டைப் பையிலிருந்து பர்ஸை எடுத்தான். நான்கணா கொடுத்துப் புதிதாக வாங்கிய பிளாஸ்டிக் பர்ஸ் அது. பட்டணத்தில் வாங்கியதுதான்.

நடந்துகொண்டே சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டான். 'அம்மாடி, எத்தனை பெரிய கட்டடம், எவ்வளவு மாடிகள்..' என்று ஆச்சரியப்பட்டுப் போனான் முனியன்.

பக்கத்திலிருந்த மூர்மார்க்கெட்டுக்குள் நுழைந்தான்.

'எங்கேயாவது நாடகம் நடிச்சாப் பாக்கலாமா?' என்ற சபலம் அவனுக்கு. 'சே, அதற்குக் கூடப் பணமல்லவா வேண்டும்?'

ஓர் இடத்தில் கூட்டம் குழுமியிருந்தது. அங்கே அவசர அவசரமாகச் சென்றான் முனியன்.

''உங்கள் பையன் விஷயமாக உங்களைப் பார்க்கவேண்டும் என்று தான் வந்தேன்.''

''தெரியும், ஸார். அவன் சரி
யாகப் படிக்கவில்லை என்று செ
லப்போகிறீர்கள். நீங்கே
ஷன் சொல்லிக் கொடுக்க
புக்கொள்ளப்போகிறீர்கள்
வளவுதானே? ஆ
இந்த வீட்டில்
கிற காரி

யாரோ ஒருவன் சீட்டுக்கட்டை வைத்துக்கொண்டு வித்தை காட்டிக்கொண்டிருந்தான்.

''ஏஸ் மூன்று, ஓடிவா, ஓடிவா!'' என்று கத்தினன். அவ்வளவுதான்! மறுகணம் செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சீட்டுக் கட்டிடையேயிருந்து புறப்பட்டு வந்தது அவன் குறிப்பிட்ட சீட்டு. முனியன் சிலையாய்ச் சமைந்து விட்டான்! சுமார் இருபது நிமிஷங்கள் அவன் பார்த்த வித்தைகளைக் கண்டு வியந்து நின்று விட்டான். 'கிராமத்திலே இந்த மாதிரி வித்தையெல்லாம் பார்க்க வேணுமின்னு எட்டணாவாவது கொடுக்க வேணுமே, அது இப்போது லாபம்' என்று திருப்திப்பட்டுக்கொண்டே நகர்ந்தான் அவன்.

அந்தக் கூட்டத்தின் பக்கத்திலேயே இன்னொரு கூட்டம். அங்கே மண்டை ஓட்டை வைத்துக்கொண்டு ஒருவன் மாயமந்திர தந்திர வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். யாரோ ஒருவர் கையிலிருந்து நாலணாவை வாங்கிக்கொண்டு அது எந்த வருஷத்தில் அச்சடிக்கப் பட்டது என்பதை, பாயிலே குப்புறப் படுத்திருந்த பையனைச் சொல்லச் சொன்னன். அவன் சொல்லி வைத்தாற்போலச் சரியாகவே சொன்னன். இதையெல்லாம் காணக் காண முனியனுக்கு ...சரியம் தாளவில்லை. ... நெரிசல் கூட் ...ல அரை மணி ...டது. 'இதற் ... கிராமத் ... செல ... அது

டது. சிவப்பு, பச்சை விளக்குகள் ஜாலம் புரிந்தன. அங்கே என்ன கூட்டம்! ஓ சினிமாவா! முனியன் அங்கே ஓடினன்! செய்திப் படம் காண்பித்துக்கொண்டிருந்தார்கள். 'காலணாச் செலவின்றிச் சினிமா! நாலணா கொடுத்துத்தான் சினிமா பார்க்க முடியும் நம் ஊரில்!' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டே சினிமாவைப் பார்த்தான்.

'பட்டணத்திலே நாம் எவ்வளவு மிச்சம் செய்துவிட்டோம்? இதுவரை நாம் பார்த்ததெல்லாம் ஒரு ரூபாய் கொடுத்துப் பார்க்க வேண்டியவை. இந்தப் பட்டணத்திலே இருந்தால் செலவில்லாமலேயே வேடிக்கை, விநோதம் பார்த்து விடலாம். இன்றைக்கு ஒரு ரூபாய் லாபம்' என்று அவன்



தான் அடைந்த லாபத்தைக் கணக்குப் போட்டான்!

'சரி, காலணுக் கடலையாவது வாங்குவோம். தம்படி கூடச் செலவு செய்யாமல் வீட்டுக்குத் திரும்புவதாவது' என்று எண்ணிக் கொண்டே முனியன் பையிலே கையை விட்டான்.

அவனுக்குப் 'பகீ'ரென்றது. இது என்ன? பையிலே பர்ஸைக் காணுமே! முழு இரண்டு ரூபாய் வைத்திருந்த புதுப் பிளாஸ்டிக் பர்ஸைக் காணுமே!

தலை கிறுகிறுத்தது. ''ஐயோ பர்ஸ்..!'' என்று கத்தினுன். அவனைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது.

''பையிலே பர்ஸ் வைத்திருந்தேன்..காணும்..'' என்று விக்கினுன் முனியன்.

''கூட்டத்திலே போனுல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமோ?'' என்று சொன்னுர் ஒருவர். ஒரு ரூபாய் லாபம், இரண்டு ரூபாய் நஷ்டம்; ஆகக் கடைசியில் நஷ்டத்திலே கொண்டு வந்துவிட்டன இந்த வேடிக்கைகள்!

முனியனின் கண் எதிரே பட்டணம் கெக்கலி கொட்டிச் சிரித்தது!



சுதந்தர ஜோதி

எம். சீனி

கல்கத்தா வீதி யொன்றில் கல்யாண ஊர்வலம் ஒன்று நகர்ந்துகொண் டிருந்தது. குழல் ஊத, மேளம் முழங்க, பட்டாடைகள் சரசரக்க மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

இடையிடையே மாற்றுடை தரித்த ரகசியப் போலீசார் யாரையோ பிடிக்க அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர்.

இன்ஸ்பெக்டரின் முரட்டுக் கரம் ஓர் அழகான வாலிபனின் கழுத்தில் விழுந்தது. அவனால் நகர முடியவில்லை. கூட்டமோ நகர்ந்துகொண் டிருந்தது: தூரத்தில் சென்று மறைந்தது.

''புரட்சியில் பங்குகொண்டவன் நீதானே? உண்மையைச் சொல்லிவிடு. நீ யார்?'' அதட்டிக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே: புரட்சிக்காரன்!''

''அடக்கிப் பேசு, நாவை. நான் யார் தெரியுமா?''

''வெள்ளையருக்குப் பயந்து சொந்த நாட்டையே காட்டிக் கொடுக்கும் துரோகி நீ: தெரிந்துதான் பேசுகிறேன்.''

''இன்னும் தெரிந்துகொள்: இதோ..!'' படீரென ஓர் அடி வாலிபனின் தலையில் விழுந்தது. முண்டாசு தெறித்தோடியது.

ஆ..! அது பெண்! கோபம் கொண்டு பொங்கி எழும் நாகம் போல நீண்ட கரு நிறப் பின்னல் தோளில் விழுந்துத் துள்ளியது.

''பெண்..நீ..பெண்!'' பதறினார் இன்ஸ்பெக்டர்! பயந்தார்!

''எ [illegible] செய்துகொண்டிருக்கிற [illegible]

[illegible] ன் டிருக்கிறேன். [illegible]

[illegible] ம் [illegible] ர் [illegible] ப்

பதுபோலவே அவர்களுக்குச் சில சலுகைகளும் உண்டு. போலீசார் எளிதில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாது.

இது நடந்தது வெள்ளைக்காரருக்கு எதிராக இந்தியாவில் சுதந்தரக் கிளர்ச்சி நடந்தபொழுது. ராணுவத்தினர் சிட்டாங் நகரில் ஆயுதக் கிடங்கு வைத்திருந்தனர். சூரியசேனர் முதலிய தேசத் தொண்டர்கள் அதைக் கொள்ளையிட்டுத் தேசீய வீரர்களுக்குக் கொடுத்துவிட்டனர். இதனால் அவர்களைப் பிடிக்க ராணுவமும் போலீசாரும் மும்முரமாய் முயன்று வந்தனர்.

காட்டில் தலைமறைவாய் வாழ்ந்து வந்த வீரர்களுக்கு ரகசியமாய் உதவி செய்ய முன் வந்தாள் ஒரு பெண்: மாணவி: மேலே கண்ட கல்பனா! சுதந்தர வீரர்களுக்குச் செய்தி கொண்டு செல்லும் சிட்டுக்குருவி அவள். வெகு நாட்களாகத் தேடப்பட்டு வந்த பறவை இன்று போலீசாரின் வலையில் விழுந்துவிட்டது.

இன்ஸ்பெக்டருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. கல்பனா காலேஜ் பெண். அவளை அங்கே கொண்டுபோய் விடலாம். ஏனெனில் பிரின்சிபால் ரமேஷ் பாபு மிகவும் நல்ல மனிதர். வெள்ளைக்காரர்களுக்குப் பிடித்தமானவர். துப்பாக்கி, வெடிகுண்டுகளெல்லாம் அவருக்குப் பிடிக்காது. 'டபீர் டுமீல்'களுக்கெல்லாம் படீரென்று முதுகில் இரண்டு கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விடுவார். அவருடைய அத்தாட்சி கிடைத்துவிட்டால் கல்பனாவைக் கைது செய்வது எளிதாகிவிடும்.

கார் காலேஜ்முன் வந்து நின்றது. இன்ஸ்பெக்டர் கல்பனாவுடன் பிரின்சிபால் அறைக்குள் வந்தார்.

''இவளைத் தெரியுமா சார்.. இந்தப் பெண்..?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''தெரியுமாவா? இவள்தான் ஐயா, இந்தக் காலேஜில் முதல் மாணவி. என்ன வேண்டும் உங்களுக்கு?''

''இல்லை சார்: புரட்சிக்காரர்களுக்கு உதவி செய்யச் சென்ற பொழுது பிடித்தோம். இவளைக் கைது செய்யப் போகிறோம். இவள் குணம் எப்படி?''

''என்ன ஐயா இப்படிக் கேட்கிறீர்? குணத்தில் தங்கம் இவள். புரட்சிக்காரர்களைப் பிடிக்கச் சொன்னால் நீர் பள்ளிப் பெண்களைப் பிடித்து வருகிறீரே..? போமையா..போம்!'' என்றார் பாபு வெறுப்புடன்.

இன்ஸ்பெகடருக்கு வேறு வழியில்லை: விடவும் மனமில்லை. வெகு நாட்களாக அவர் கண்ணி வைத்த குருவி இன்றுதான் அகப்பட்டது. அதை விட்டுவிடுவதா? இவளைப் பிடித்தால் இனி வீரர் யாவரும் அகப்பட்டுக்கொள்வர். இவளுக்கு இடம் தெரியும். அவர்களைப் பிடித்துவிட்டால்..? தமக்குப் பெரும் மதிப்பு ஏற்படும்: பதவியும் உயரும்.

கல்பனாவை விடாமல் நேரே மேல் அதிகாரியின் வீட்டிற்குக் காரை ஓட்டினார் இன்ஸ்பெக்டர். அவருடைய அநுமதி கிடைத்துவிட்டால் போதும். வழக்குத் தொடர்ந்து விடலாம்.

கல்பனாவை வாசலில் கண்டதுமே அதிகாரியின் மகள் ரூபி ஓடி வந்து, ''வாடியம்மா..வா.. எத்தனை தடவை உன் வீட்டிற்கு அலைகிறேன். என் வீட்டிற்கெல்லாம் நீ வருவாயா? நிற்கிறாயே, உட்கார்!'' என்று உபசரிக்கத் தொடங்கிவிட்டாள். இருவரும் ஒரு வகுப்பில் படிப்பவர்கள்.

வாயில் அகப்பட்ட எலியை விட்டுவிட்ட பூனைபோல விழித்தார் இன்ஸ்பெக்டர். இனிமேல் ஏதும் பேசினால் ரூபி விடமாட்டாள். பதவியே போய்விடும். அவள் சொற்படிதான் அதிகாரி நடப்பார்.

இன்று எந்த நரி முகத்தில் விழித்தேனோ? இந்த மட்டிற்கும்

"ஏண்டா பையா! நீ நீ அனுதை அப்படின்னு சொல்றியே, அதுக்கு என்னடா அத்தாட்சி?"

"அதோ, அங்கே மரத்தடியிலே பாருங்க எங்க அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, சித்தப்பா எல்லாரும் இருக்கருங்க! நீங்க வேணுமின்னு வந்து கேளுங்க!"

தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போகட்டும். பதவி உயர வேண்டாம். இருக்கிற பதவியைக் காப்பாற்றிக்கொண்டாலே போதுமென்று எண்ணி நழுவிவிட்டார்.

அடுத்த நாள் காலேஜில் நுழைந்ததுமே பாபு கல்பனுவை அழைத்துவரச் சொல்லியிருந்தார். மனம் உருகப் பேசினர்.

"இப்படிச் செய்யலாமா, அம்மா? எத்தனை தடவை சொல்கிறேன். அவர்கள் விடமாட்டார்கள். சுட்டுத் தள்ளிவிடுவார்கள். என் பேச்சைத் தட்டாதே, மகளே. இனியாவது புரட்சியில் பங்கு கொள்ளாதே!"

கண்ணீர் வடிக்க நின்ருள் ...்பனு. அவளுக்கு அழுகை வந்து ...

...லே, பாபு: போக ...மலிருக்க ...

"ஆமாம் அம்மா.. அப்படித் தான். அந்தப் பொல்லாதவர்கள் ஒரு வெறியை உண்டாக்கிவிட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு நீதானு அகப்பட வேண்டும்? படிக்காத மக்குகளாகப் பத்துப் பேர்களைக் கொடுக்கிறேன். உன்னை விட்டு விடட்டும். நன்ருய்ப் படிக்கிறவர்களைத்தான் கெடுக்கிருர்கள்."

கல்பனு சிரித்தாள், சிறு குழந்தையைப்போல.

"பூஜைக்கு நல்ல மலர்கள் தானே வேண்டும், பாபு? சுதந்தரப் போராட்டம் தேச மாதாவுக்குச் செய்யும் பூஜை."

"பூஜை! துப்பாக்கியால்தான் கிடைக்கும் முதுகில்!"

"பயந்துவிட மாட்டோம் பாபு: மார்பில் குண்டுகளைத் தாங்குவோம். எங்களை இப்படிப் பயமுறுத்த முடியாது. தாய் நாடு எங்கள் தெய்வம். உயிரைக் கொடுத்தாவது அதன் சுதந்தரத்தைக் காப்போம். எங்கள் கடமை அது."

கண்கள் சிவக்க உறுதியாகப் பேசினுள் கல்பனு.

"அதைவிடப் பெரிய கடமை இருக்கிறதம்மா. நீ எனக்கு வாக்களித்திருக்கிருய். மாகாணத்திலே முதன்மையாய்த் தேறி, இந்தப் பள்ளிக்குப் பெருமை தேடித் தர வேண்டும். முடியுமா உன்னுல்? இரண்டு கடமைகளை எப்படி ஒரே நோத்தில் செய்ய முடியும்?"

கல்பனு தயங்கினுள். அவள் சக்தி வாய்ந்த பெண். "முடியும் பாபு. நான் செய்வேன்" என்ருள் உறுதியாக. பாபு ஆச்சரியமடைந்தார்.

மூன்று மாதமாக வேறு எதிலும் தலையிடாமல் அக்கறையாகப் படித்தாள் கல்பனு. பரீட்சை முடிந்தது. மறு வாரமே கைது செய்யப்பட்டாள். ஒரு கலவரத்தில் வெள்ளையரை எதிர்த்துச் சண்டையிட்டதற்காக வழக்கு கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் நடந்துகொண்டிருந்தது.

பத்திரிகை விற்கும் பையன் ஒரு நாள், "பரீட்சை ரிசல்ட்..

ஓரணு, ஓர் அணு'' என்று கூவி விற்றுக்கொண் டிருந்தான். பாபுவும் ஓடிச் சென்று ஒன்று வாங்கினார். அவர் கண்கள் ஆர்வத்துடன் எதையோ தேடின. கண்டு கொண்டார்.

''எலிசபெத் கல்லூரி மாணவி கல்பனா அதிக மார்க் வாங்கி மாகாணத்திலே முதன்மையாகத் தேறியிருக்கிறாள்!''

ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பாபு ஓடினார். பேப்பருடன் கோர்ட் வாசலுக்கு வரவும் கல்பனா போலீஸ் துணையுடன் வெளிவரவும் சரியாயிருந்தது.

''நீ தேறிவிட்டாய், குழந்தாய்! முதல் வகுப்பில்! உன் கடமையை முடித்துவிட்டாய்!'' - கத்திவிட்டார் பாபு. கல்பனா சிரித்தாள்.

''என் இரண்டாவது கடமையும் முடிந்துவிட்டது!'' அமைதியாகச் சொன்னாள். அந்த அமைதி பாபுவுக்குப் பயத்தைத் தந்தது.

''ஜன்ம தண்டனையா?'' என்றார் நடுங்கும் குரலில்.

''இல்லை. மரண தண்டனைதான்'' சாந்தமாகப் பதில் வந்தது. பயமற்ற கம்பீரமான முகம். திலகமிட்ட எடுப்பான நெற்றி: உருளும் வெண் சங்கு போன்ற பெரிய கண்கள்: 'இவள் பெண் அல்ல: பாரத மாதாவின் பிம்பம். சுதந்தரத்தின் ஜோதி' என நினைத்தார் பாபு.

அவர் அழவில்லை: கவலைப்படவில்லை. புழுதியைக் கிளப்பிக் கொண்டு கல்பனாவின் கார் ஓடும் வரை அப்படியே நின்றார்.

''நீ சாகமாட்டாய் குழந்தாய். சுந்தர ஜோதி நீ: [illegible]
இந்த நாட்டின் [illegible]
இருப்பாய்'' [illegible]
அவ[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நஷ்டம் யாருக்கு?

'லெமன்'

உறுப்பினர்

ராமு: ஓர் இளம் எழுத்தாளன்.
சாமு: ஓர் இளம் ஓவியன்.
திலக்: 'கதம்பம்' பத்திரிகையின் ஆசிரியர்.

காட்சி 1

காலம்—முற்பகல்; இடம்—சாமுவின் அறை.

(சாமு ஒரு சித்திரத்தை எழுதிவிட்டு அதில் இறுதி வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறான். ராமு வருகிறான்.)

ராமு: (வந்துகொண்டே) அடேயப்பா, அபாரம்! இது நம் 'கதம்பம்' ஆண்டு மலருக்காகப் போட்ட சித்திரம்தானே?

[illegible]ாமு: (பெருமையுடன்) ஆம் [illegible] இருக்கிறதல்லவா? [illegible] ல்லை; எனக்கு [illegible] ம்விருக்கை. [illegible] ப

ராமு: எனக்கும் அப்படித்தான். 'கதம்பம்' ஆசிரியர் அவ்வளவு தூரம் கேட்டுக்கொண்டதை மறுக்க முடியாமல் ஒரு சிறு கவிதையை எழுதிப் பார்த்தேன். சிறப்பாக அமைந்துவிட்டது. இதோ, நீயேதான் பார்!

(கவிதை எழுதிய கையெழுத்துப் பிரதியை எடுத்துச் சாமுவிடம் கொடுக்கிறான்.)

சாமு: (படித்துவிட்டுத் தானே மடித்துக்கொண்டே) ராமு, நான் என்ன சொல்வேன் போ! இவ்வளவு சிறந்த கவிதையை ஏதாவது பிரபல பத்திரிகைக்கு அனுப்பலாமே! புகழுக்குப் புகழ்; பணத்துக்கும் பணம்! (கொடுக்கிறான்)

ராமு: நானும் நினைத்தேன். 'கதம்ப'த்திற்கு வேறொன்று எழுதித் தர நேரமில்லையே! எப்படியும் இன்று இரவிற்குள் தந்துவிட வேண்டுமென்று திலக் சொல்லியிருக்கிறாரே.

சாமு; ஆமாமாம், கவர்னர் உத்தரவுதான்! (ஏளனச் சிரிப்புடன்) எல்லாம் நாளையோ, மறுநாளோ அனுப்பி வைப்பதாகச் சொல். பிறகு நீ முன்பு எழுதியவைகளிலிருந்து ஏதாவது ஒன்றை எடுத்து அனுப்பினால் அனுப்பு; இல்லை, பேசாமல்தான் இரேன்? என்ன நஷ்டமாகிவிடும்?

ராமு: நீ சொல்வதும் சரிதான். சௌகரியம் போல் செய்கிறேன். இன்னொன்று; உன் சித்திரம்கூடத்தான் குறைந்தது இரண்டு ரூபாய் வரை எளிதில் விலை போகும். 'கதம்பம்' மலருக்கு வேறொரு படம் சற்றுச் சுமாராகப் பார்த்துக் கொடுத்துவிடேன்! என்ன, நான் வரட்டுமா? வணக்கம்.

சாமு: வணக்கம். (பிரிகிறார்கள்)

காட்சி 2

(இரண்டு நாட்களுக்குப் பிறகு)

காலம்—பிற்பகல்; **இடம்**—ராமுவின் வீட்டு வாயில்புறம்.

சாமு: (சைக்கிள் மணியை ஒலித்துக்கொண்டே) ராமு, ராமு..!

ராமு: (வந்துகொண்டே) என்னப்பா சாமு, என்ன விசேஷம்?

சாமு: ஒன்றுமில்லை, திலக்கைப் பார்த்து மலருக்கான என் சித்திரத்தைக் கொடுத்து வரலாமென்று புறப்பட்டேன். அதை நீயும்தான் பாரேன்! (அட்டைக் கட்டுகளைப் பிரித்து ஒரு சித்திரத்தை எடுத்து ராமுவிடம் நீட்டி) எப்படி இருக்கிறது?

ராமு: ஏன், நன்றாகத்தான் இருக்கிறது. (படத்தைக் கொடுத்துவிட்டு) திலக் மிகவும் கெடுபிடி செய்கிறார். நானும் ஒரு கவிதையை எழுதி வைத்துவிட்டேன். அதையும் சற்று அவரிடம் சேர்த்துவிடுகிறாயா?

சாமு; அடேயப்பா..பெரி(ய்)ய காரியம்! எடுத்து வா..

(ராமு ஒரு காகிதத்தையும் உறையையும் கொண்டு வருகிறான். பிறகு தன் பேனாவைத் திறந்து உறையின்மேல் விலாசம் எழுதுகிறான்.)

சாமு: (ராமு கையிலிருந்த காகிதத்தை உரிமையுடன் பறித்து) நான் பார்க்கலாம் அல்லவா? (பிரித்துப் படிக்கிறான்)

ராமு: என்னப்பா சொல்கிறாய்? இது போதாது?

சாமு: தாராளமாக!

(உறையுடன் ராமுவிடம் விடை பெற்றுக்கொண்டு செல்கிறான். கணகணவென்று சைக்கிள் மணி ஒலிக்கிறது.)

காட்சி 3

(ஒரு மாதத்திற்குப் பிறகு)

காலம்—மாலை; **இடம்** ஒரு சாலை.

சாமு: வணக்கம் ராமு. 'கதம்பம்' மலரைப் பார்த்தாயா? என்னுடைய சித்திரம் வெளியாகி இருக்கிறதல்லவா?

ராமு: (அசுவாரஸ்யமாக) எல்லாம் பார்த்தேன். 'கதம்ப'த்தில் உன் சித்திர மடலுக்கும் என் கவிதைக்கும் மட்டும் இடமில்லை போலிருக்கிறது. எத்தனை அருமையாக எழுதிக்கொடுத்திருந்தேன் நான்!

சாமு: எத்தனை அழகாக வரைந்து கொடுத்திருந்தேன் நான். ஆமாம், அதை ஏன் வெளியிடவில்லை, தெரியுமா?

ராமு: (எரிச்சலும் வெறுப்புமாக) வா, வா; எல்லாம் அந்த ஆசிரியரையே போய்க் கேட்போம்.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 4

காலம்—அதே மாலை; **இடம்**—ஆசிரியர் திலக்கின் அறை.

(திலக் குனிந்தபடி ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். ராமுவும் சாமுவும் வருகிறார்கள். ராமு தன் வரவைத் தெரிவிக்க லேசாகக் கனைக்கிறான்.)

திலக்: (தலையை [illegible]
வாருங்கள் ராமு [illegible]
கள் இருவ [illegible]
தே [illegible]

உங்களுக்கு எல்லா வகையிலும் திருப்திதானே?

ராமு, சாமு: திருப்திதான்.. மலருக்காக நாங்கள் ஆசையுடன் அளித்த கவிதை, சித்திரம் இவற்றை....

திலக்: (புன்னகையுடன்) ஏன் வெளியிடவில்லை என்றுதானே? என்ன செய்வது? உங்கள் இருவரையும் நான் முழுவதும் நம்பி இருந்தேன்; மோசம் செய்துவிட்டீர்கள்!

ராமு, சாமு: (ஆத்திரமாக) மோசமா? என்ன ஐயா, செய்து விட்டோம் மோசம்? (இடத்தி

விருந்து எழுந்திருக்கிறார்கள்.)

திலக்: (அவர்களைக் கையமர்த்தி) பொறுங்கள், பொறுங்கள்! நீங்கள் மோசம் செய்தாலும் நான் மோசம் போய்விடவில்லை! இம்முறை எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே நமது மலர் விஷயச் சிறப்பிலும், தோற்றப் பொலி...வும் உயர்வாக அமைந்துவிட்... ரீ... அளித்தவைகளை ... அவை கட்... பைப் பாதித் ...)

(ராமு, சாமு அங்கிருந்து வெளியேறுகிறார்கள்.)

காட்சி-5

(ராமு, சாமு தங்கள் வீடுகளை நோக்கித் தெருவில் நடந்து கொண்டே)

சாமு: (சோர்வுடன்) கடைசியில் பார்த்தாயா, ராமு, திலக் செய்து விட்டதை?

ராமு: போகிறது போ! அதை நாம் மறந்துவிடுவோம். இதோ பார். உன்னிடம் நான் அன்றே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். மலருக்காகப் போட்ட படத்தை யாருக்கேனும் கொடுத்து விட்டாயா, என்ன?

சாமு: (துயரத்துடன்) பறி கொடுத்துவிட்டேன் ராமு அதை. என் தம்பி ஒருவன் இருக்கிறானே, விஷமக் கொடுக்கு, அவன் கையில் அது எப்படியோ சிக்கிவிட்டது!

ராமு: பிறகு?

சாமு: பிறகென்ன? குரங்கு கையில் சிக்கிய பூமாலையின் கதிதான் அதற்கும்!

ராமு: அடடா! நன்றாக இருந்ததே அது! நாம் தான் வாங்கி வைத்துக் கொள்வோமே என்று நினைத்தேன்.

சாமு: அதற்கென்ன? வேறொன்று நன்றாகப் போட்டுத்தருகிறேன். உன் கவிதையை எதற்காவது அனுப்பினாயா? பிரசுரமாகிவிட்டதல்லவா?

ராமு: (சலிப்புடன்) அதையேன் கேட்கிறாய், சாமு? அது முன்பே வந்ததுதானே! நீகூட யோசனை சொன்னாயே! வந்ததையே அனுப்பலாம் என்று.

சாமு: சரிதான். நீயும் அப்படித்தானா? அதனால் திலக்குக்கும் நஷ்டமில்லை, நமக்கும் நஷ்ட மில்லை என்று சொல்லு!

(திரை)

அநுராதபுரம்

ப. சொர்ணவள்ளி

சென்ற மே மாதம் 18-ஆம் தேதி நமது நேருஜி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த போது, சரித்திரப் பிரசித்திபெற்றதும் இயற்கை வனப்பும் மிகுந்த அநுராதபுரத்துக்குக் கூட்டிக்கொண்டு போய், காண்போரைக் கவரும் எழிற்காட்சிகளைக் காணவைத்துக் களிப்பூட்டினுர்கள். அன்றுதான் நானும் முதன் முதலாக நேருஜி அவர்களைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். என்னேடு நேருஜியைக் கண்ட என் அண்ணுவின் காமிரா, கூடவே அநுராதபுரத்தின் அழகுமிகு காட்சிகளையும் கண்டது. ஈழவளநாடு வரும் வெளிநாட்டவர் காணத் தவருத அநுராதபுரத்தைப் பற்றிய ரசமான விஷயங்களை இங்கே கூறுவதோடு அதன் அழகுமிகு காட்சிகளையும் காட்டுகிறேன், வாருங்கள்.

இப்போது சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கும் அநுராதபுரியைத் தோற்றுவித்தவன் அநுரதன் எனும் அரசன் என ஈழநாட்டின் புராதனச் சரிதத்தைக் கூறும் 'மகாவம்சம்' என்ற பழமையான பாலி நூல் கூறுகிறது.

எங்கே பார்த்தாலும் கோயில்களும் கோபுரங்களுமாகத் தஞ்சை நகர் காட்சியளிப்பதைப் போல் கி. பி. 983-ஆம் ஆண்டு வரையில் பல அரசர்களின் ராசதானியாக இருந்து வந்த அநுராதபுரம், பௌத்த மதச் சின்னங்களுடன் திகழ்கிறது.

புனித நகர் என அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அநுராதபுரத்தில் பதினுறு புனித க்ஷேத்திரங்கள் உள்ளன. அநுராதபுரம் செல்லும் பௌத்தர்கள் இந்தப் பதினுறு க்ஷேத்திரங்களையும் தரிசித்தே திரும்புவார்கள். இவற்றில் ஒன்று 'ருவான்வெலிசாயா' எனும் விகாரை. நகரின் தென் பாகத்தில் அமைந்துள்ள இது, கி. மு.101-ஆம் ஆண்டில் சிங்கள அரசருள் கீர்த்தி வாய்ந்த துட்டகைமுனு

★

சரித்திரப்
அ



ருவான்வெலிசாயா

எனும் அரசனுல் கட்டப்பட்டது. அநுராதபுரத்திலுள்ள எண்ணற்ற விகாரைகளில் இது ஒன்றே இன்னும் புத்தம் புதிதாக காட்சியளிக்கிறது. முகிலை முட்டி நிற்கும் இதைக் கொஞ்சநேரம் அண்ணுந்து பார்த்துக் கொண்டிருந்தால் போதும்; நம் தலை சுற்ற ஆரம்பித்து விடுகிறது. அவ்வளவு உயரம்!

உலகத்திலுள்ள வயது முதிர்ந்த மரங்களில் ஒன்று, அநுராதபுரத்தி



லுள்ள வெள்ளரசமரம். கயாக்ஷேத்திரத்தில் புத்தர் ஞான ஒளி பெற்ற பொழுது அமர்ந்திருந்த வெள்ளரசமரத்தின் ஒரு கிளையே அநுராதபுரத்தில் நாம் காணும் வெள்ளரசமரம். அசோக சக்கரவத்தி, அக்கிளையை, இலங்கையில் நாட்டும்படி தமது மகளான சங்கமித்திரை மூலம் அனுப்பினதாகச் சரித்திர நூல்கள் கூறுகின்றன. இக்கிளையை வெட்டச் சென்ற அசோக சக்கரவர்த்தி, வெட்ட மனமில்லாது மனக்குழப்பத்துடன் நின்றபோது ஒரு கிளை தானுகவே முறிந்து விழுந்ததாகக் கூறும் ரசமான கர்ண பரம்பரைக் கதை ஒன்று பௌத்தர்களிடையே நிலவுகிறது. இம்மரத்

'ருவான்வெலிசாயா'வின்
தனித் தோற்றம்

தைச் சுற்றிப் புத்தபெருமானின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிற்பங்கள் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன், ஒன்பது மாடிகளைக்கொண்ட பெரிய மாளிகை ஒன்று அநுராதபுரத்தில் இருந்தது என்ருல் யார்தான் வியக்காமல் இருப்பார்கள்! 'ஆயிரக்கால் மண்டபம்' என்று இப்போது அழைக்கப்படும் 'லோவ மகாபாயா' 1600 கருங்கல் தூண்களால் கட்டப்பட்டது. இவ்வழகிய மாளிகை ஆயிரம் அறைகளைக் கொண்டிருந்தது. பௌத்த மதத்தைப் பரப்பிய பௌத்தபிக்குகள் இதில்தான்

தங்கியிருந்தார்கள். இது இப்போது உருச் சிதைந்துவிட்டது. நூற்றுக்கணக்கான தூண்கள் மட்டுமே இன்றும் காட்சி யளித்துக் கொண் டிருக்கின்றன.

அநுராதபுர நகரை நடு மையத்தில் வைத்து நாலாபுறமும் குளங்களையும் ஏரிகளையும் வெட்டியிருக்கிறார்கள் அக்கால அரசர்கள். நகரைச்சுற்றி ஒரே குளங்கள் மயம்! கி. பி. 171-இல் வாழ்ந்த வசபன் என்னும் அரசன் மட்டும் ஏறக்குறைய பதினொன்றுக்கும் அதிகமான குளங்களை வெட்டுவித்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். என்றாலும், வசபனுக்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் ஆண்ட மகா

வெள்ளரசமரத்தைச் சுற்றிலும் புத்தபெருமானின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிற்பங்கள் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளன.

சேனன் என்ற மன்னன் கட்டிய 'மின்னேரியா'க் குளம் தான் மிகப் பெரியது. 20 மைல் சுற்றளவுள்ள இக்குளத்தின் அணை ஐம்பது அடி உயரம் உள்ளது.

புராதனச் சின்னங்கள் கொண்ட காட்சிச்சாலை ஒன்று அநுராதபுரத்திலிருக்கிறது. இதில் நுழையும் போது நமக்குத் தெரிவது 'படம் பிடிக்கப்படாது' என்ற அறிவிப்பு. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கை முழுவதையும் ஆண்ட எல்லாளன் என்னும் தமிழ் நாட்டு மன்னன் ஆண்டதற்கான சரித்திர



'ருவான்வெலிசாயா' விகாரையைச் சுற்றிலுமுள்ள யானைச் சிற்பங்கள்.

காலச் சின்னங்களை இங்கே காணலாம்.

தமிழர் படை எடுப்புக்கு அஞ்சி, குடகன்னதிசன் என்ற அரசனால் நகரைச் சுற்றிக் கட்டப்பட்ட முப்பத்தைந்து மைல் நீளமும் பதினெட்டு முழ உயரமுமான கன் மதில் இப்போது பெரும்பாலும் அழிந்துபோய் விட்டது.

அநுராதபுரத்தைச் சார்ந்த இஸ்ருமுனியாவிலுள்ள சிற்பங்கள் பல்லவ முறையைப் பின்பற்றி இருப்பதாகச் சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள்.

இயற்கை வனப்பு மிகுந்த இடத்தில் அமர்ந்துள்ள, காண்போரைக்

மிகுந்தலையிலுள்ள விகாரை ஒன்றிலிருக்கும் புத்த பெருமானின் அருள் வடிவம்; காண்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறது!

வனப்பு மிகுந்த மிகுள் தலைப்பகுதி. பிரம்மாண்டமான கல்மலைமீதிருந்து இப்படம் எடுக்கப்பட்டது.

கவரும் மிகுந்தலைக்குக் கொஞ்சம் வருவோமே!

இங்கேதான் இயற்கை அன்னை அரசோச்சுகிறாள். வானத்தை முட்டி நிற்கும் மலைகளும் தலையைக் கிறு கிறுக்க வைக்கும் பாதாளங்களும் பார்க்க ரம்மியமான காட்சிகள். ரசனை அற்றவர்களைக்கூட ரசிகர்களாக்கிவிடும் இடம் இது. அழிந்தும் அழியாமலுமுள்ள விகாரை ஒன்றில் புத்தபெருமானின் அருள் வடிவம் காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது, நம்முடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறது!

பொதுவாகக் கூறப்போனால், அநுராதபுரத்தைப் போன்ற வனப்புமிகு இடங்களாலேயே சிறிய தீவான இலங்கை சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது.

மூளைக்கு வேலை



இங்கே காண்பது ஒரு குடியானவனின் சதுரத் தோட்டம். அதில் 24 மாமரங்கள் இருக்கின்றன. அந்தக் குடியானவனுக்கு எட்டுப் பிள்ளைகள். அவன் இறக்கும் தறுவாயில் மரண சாஸனம் ஒன்று எழுதினான்.

அதில், ''ஒவ்வொருவருக்கும் சம அளவுள்ள நிலமும், சம எண்ணிக்கையுள்ள மரங்களும் சேர வேண்டும்'' என்று இருந்தது.

பாவம், அந்தப் பிள்ளைகள் படிப்பு வாசனை அறியாதவர்கள். மிகவும் திண்டாடுகிறார்கள்.

எங்கே, நீங்கள் அவர்கள் சண்டையைத் தீர்த்து வையுங்கள், பார்க்கலாம்!

விடை: வேறு பக்கம் பார்க்க.

வரும் வெள்ளத்திலே துள்ளிப் பாய்ந்துவிட்டார்கள். சின்னக் காளி வேங்கையாரின் சினம் காட்டாற்று வெள்ளம் போல் கட்டுக்கடங்காமல் போயிற்று. அந்த ஆத்திரம் தீர, துணையாட்களில் ஒருவனை, குதிரைச் சவுக்கால் அடித்தபடியே, ''அவர்கள் வெள்ளத்தோடு மாய்ந்தாலொழிய அவர்களை விடாமல் பின்பற்றி ஓடுங்கள்!'' என்று கர்ஜனை புரிந்தார்.

மாலைச் சூரியன் மலைவாயிலில் இறங்கிக்கொண் டிருந்தான். காட்டின் இருள் கனத்து வரத் தொடங்கியது. ஆற்றில் இறங்கி

நீந்திச் சென்றுகொண் டிருந்தவர்களைக் கரையோரமாகவே துரத்திக்கொண்டு சின்னக் காளி வேங்கையாரும் துணையாட்களும் போனார்கள்.

காட்டாற்றின் வேகத்தில் கற்களும் பாறைகளும் புரண்டோடும்போது பத்து வயதுப் பாலகனால் எத்தனை நேரம் சமாளித்துப் போக முடியும்? அவனுக்கு மூச்சுத் திணறியது; விழி பிதுங்கியது; கைகளும் கால்களும் இற்றுச் சோர்ந்தன, அவர்கள் ஆற்றோட்டத்தோடு போய், மெதுவாக அக்கரை சேர்ந்துவிட முயன்றார்கள். ஆனால் பலமுறை சிறுவன் வெள்ளத்தோடு அடித்துப் போகப்பட்டான். இளம் வீரன் மட்டும் சற்று எச்சரிக்கையாக இல்லாமல் போயிருந்தால் அவன் ஆற்றோடு போயிருக்க வேண்டியதுதான்.

ஆயினும் என்ன? இன்னும் கால் பாகம்கூட முற்றிலும் ஆற்றைக் கடக்கவில்லை. விறளி மலைப் பாறைகளைக் கடந்துவிட்டால் ஆறு பதினைந்து இருபது கோல் ஆழத்தில் சீறி விழுந்து செல்கிறது. எப்படிப்பட்ட வீரனாயினும் அந்த இடத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் அப்புறம் ஆள் உருவத்தையே காண்பது கடினம்.

பின்னால் கரையிலிருந்து வேங்கையார் குழுவினர் அவர்களைத் தலைதூக்கவொட்டாதபடி அம்பு எய்து தாக்கினார்கள். ஆற்று வேகத்தை எதிர்த்து அவர்களால் குறுக்கே வேகமாகவும் கடக்க முடியவில்லை. இன்னும் இப்படியே கூப்பிடு தூரம் போனால் சமாளிக்கலாம் என்றால் விறளி மலை மடு கவிந்து வரும் இருளோடு அவர்களை விழுங்கப் பயங்கரமாக இரைச்சலிட்டு முழங்கிக்கொண் டிருந்தது.

முன்பின் யோசியாமல் காட்டாற்று வெள்ளத்தில் குதித்தது பெரும் பிழை என்பதை அவர்கள் இப்போதுதான் உணர்ந்தார்கள். வெள்ளத்தை எதிர்த்து நிற்பது இத்தனை கடினமாக இருக்கும் என்று அவர்களுக்கு முதலில் தெரியவில்லை.

திடீரென்று ஆற்று முழக்கத்தை மீறிய பேரொலி ஒன்று ஆரவாரத்தோடு எழுந்தது. சிறுவன் இளம் வீரனின் தோளைப் பற்றிக்கொண்டு எட்டிப் பார்த்தான். அடுத்த கணம் ஆற்றின் இரு கரையும் எதிரொலிக்கும் குரலில் அவன் வீலென்று அலறினான்.

வீரன் திடுக்கிட்டு, ''தம்பி! என்ன இது?'' என்று தோளைச் சிலுப்பிக்கொண்டு கேட்டான்,

சிறுவன் பயத்தினால் கண்கள் இரண்டையும் இறுக மூடிக்கொண்டு, ''அதோ, பெரிய மரம் ஒன்று வெள்ளத்தில் அடித்துப் புரண்டு வருகிறது, அண்ணா!'' என்று கூவினான்.

வாயளவுத் தண்ணீருக்குமேல் தலை தூக்காதபடி நீந்தி வந்த இளம் வீரன் இப்போதுதான் தங்களுக்கு நேரவிருந்த புதிய அபாயத்தைக் கண்டுகொள்ளலானான். ஓடிப் புரண்டு உருண்டு வரும் வெள்ளத்திலே பிரம்மாண்டமான காட்டு மரம் ஒன்று வேரோடு பெயர்ந்து விழுந்து வந்துகொண் டிருந்தது.

அதைப் பார்த்தவுடனே எதற்கும் அஞ்சாத அவன் நெஞ்சு துணுக்குற்றதுபோல் தோன்றியது. ஆயிரம் வேங்கையார் சீறுவதுபோல் காட்டாறு கடுஞ்சினம் கொண்டு பொங்கி வந்ததைக் கண்டு அவன் ஒரு நொடி கலங்கித்தான் போனான்.

ஒரு பக்கம் ஆவென்று உயிரைக் குடிக்க முழங்கி நின்ற விறளிமலை மடு; மறு பக்கம் அவர்களை மடுவுக்குப் பிடித்துத் தள்ளிப் பலி வாங்கப் புரண்டுவரும் பிரம்மாண்டமான மரம்—பாழுங் கிணற்றுக்கு மேலே சிங்கம், கீழே முதலை, இரண்டுக்கும் நடுவிலே பெயர்ந்துகொண் டிருக்கும் கல்லைப் பிடித்துக்கொண்டு தொங்கினானாமே ஒருவன்—அவன் நிலைதான்!

என்ன செய்வது? அவர்கள் கதி இப்படியா முடிய வேண்டும்?

(தொடரும்)

பரிசுபெற்ற தொடர்கதை:

அந்தி மயங்கும் நேரம். சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையின் மணற்பரப்பில் அன்று ஒரே அல்லோல கல்லோல மாக இருந்தது. ஏதோ அரசியல் கூட்டம் நடைப்பெறப் போகிறது. யாரோ பெரிய தலைவர் வந்து பேசப் போகிறாராம். அவ்வளவு பெரிய மணற்பரப்பின் நடுவிலே, அந்தச் சிறிய அலங்காரமான பந்தல் எவ்வளவு அழகாகக் காட்சியளிக்கிறது! அதோ! அந்த மேடையில் விளக்குகள் ஏற்றிவிட்டார்கள்!

''ஸம்பத்! வாயேன்! கொஞ்சம் நாமும் பிரசங்கத்தைக் கேட்கலாமே! எத்தனை நேரம் காற்று வாங்குவது?'' என்று மணலைத் தட்டிக்கொண்டே எழுந்தான் ஸ்ரீதரன்.

''அது சரி ஸ்ரீதரா! உன்னிடம் எவ்வளவோ பேச வேண்டும் என்று எனக்கு ஆசை..சரி சரி வா!..அங்கே போய்விட்டு வந்துவிடலாம்'' என்றான் ஸம்பத்.

பிரசங்கி ஏதோ அடுக்கு மொழியில் காரமாக ஆனால் சாரமில்லாமல் உளறிக் கொட்டிக் கொண்டிருந்தார். கூட்டம்தான் பிரமாதமாக இருந்தது. ஸ்ரீதரன் ஸம்பத்தின் கையை அமுக்கி, ''வா! போகலாம்'' என்றான். ஸம்பத் கூட்டத்தைவிட்டு வெளியே வந்தான் திணறியபடி.

''அப்பா!..என்ன கூட்டம்! ஒலிபெருக்கியின் சத்தம் காதில் விழாத இடத்திற்குப் போகலாம்'' என்றான் ஸம்பத்.

''ஆனந்தமாகக் காற்று வாங்குபவர்களையும் கெடுத்துவிடுகிறார்கள் இந்தப் பிரசங்கிகள்..''

''அதுமட்டுமா? இந்த மாதிரிக் கூட்டம் கூட்டுவதில் எவ்வளவு ஜேபடிக்காரர்கள் லாபமடைகிறார்கள், தெரியுமா?''

''ஆமாம். அதைத்தான் கேட்க வேண்டுமென்றிருந்தேன். சமீபத்தில் உன் அப்பாகூட ஏதோ பெரிய கேஸைக் கண்டு பிடித்துவிட்டதாகப் பத்திரிகையில் படித்தேன்.''

''ஐயோ! அது ரொம்பப் பெரிய கேஸாயிற்றே..அதற்கு நான் கூடச் சிறிது உதவி செய்தேன்.''

''ஆமாம் பேப்பரில் பார்த்தேன். 'இன்ஸ்பெக்டர் மகன் கண்டு பிடித்த அதிசயம்' என்று பெரிதாகப் போட்டிருந்தார்கள்.

''முப்பது வருடங்கள் போலீஸுக்கு டிமிக்கி கொடுத்த திருடர் கூட்டமே பிடிபட்டுவிட்டது என்

ருல் பார்த்துக்கொள்'' என்ருன் ஸம்பத் பெருமிதத்துடன்.

''சென்னைப் பட்டணமே அதிசயமாகத்தான் இருக்கிறது.''

''ஆமாம், ஸ்ரீதரா! வரவர நாகரிகத் திருடர் கூட்டம் அதிகரித்து வருகிறது. அப்பா தினம் தினம் நூறு கேஸ்களைக் கொண்டு வருவார். ஒவ்வொன்றும் ஒவ்வோர் அதிசயம் போ.''

''உங்கப்பா இதையெல்லாம் உனக்குச் சொல்வாரா?''

''மற்றவர்களைப்போல இல்லை எங்கப்பா. வருகிற கேஸையெல்லாம் எனக்கும் சொல்வார். நானும் கேஸைக் கண்டுபிடிப்பதற்கு ஏதாவது உதவி செய்வேன்.''

''உதவி என்ருல் எப்படி?''

''சில ஆட்களைக் கவனிக்கச் சொல்வார். சிலருக்குப் போனில் பதில் சொல்லவேண்டியிருக்கும்.''

''ஆமாம்! இப்படிப் பழகினுல் பின்னுல் ஸி. ஐ. டி. உத்தியோகம் சட்டென்று கிடைக்கும்'' என்று சிரித்தான் ஸ்ரீதரன்.

''உனக்குத் தெரியாது, ஸ்ரீதரா! ஸி. ஐ. டி. யாக இருப்பது எவ்வளவு உற்சாகமாக இருக்கும் தெரியுமா? எனக்கு அதில்தான் ரொம்ப ஆசை..இப்பொழுது பார்.

இரண்டு நாட்களாக ஒரு புது கேஸ் வந்திருக்கிறது. என்னிடம் அப்பா நேற்று முழுக்க அதைத்தான் சொல்லிக்கொண் டிருந்தார்.''

''சரிதான் போ! நான் இங்கே வந்தது அப்படியானல் உன் வேலைக்குத் தடையாக இருக்கும்''

''அதெல்லாமில்லை ஸ்ரீதரா! நீ இப்பொழுது இங்கே வந்தது எனக்கு ஒரு யானைப் பலம் வந்த மாதிரி. உன்னை வருந்தி வருந்தி அழைத்திருக்கிறேன். எப்படி நீ எனக்கு இடைஞ்சலாக இருப்பாய்?'' என்றான் ஸம்பத்.

''இல்லை ஸம்பத்! நான் எப்படி உனக்கு உதவி செய்யப்போகிறேன் என்பது புரியவில்லை.''

''நீ சும்மா கூடவே இரு. அதுவே போதும்''

அப்பொழுது நன்றாக இருட்டி விட்டிருந்தது. ஆட்கள் நடமாடுவது மட்டும் தெரிந்ததே ஒழிய அடையாளம் தெரியவில்லை. வேர்க்கடலை, சுண்டல் விற்றுக்கொண்டு வந்தான் ஒரு பையன். ஸம்பத் அவனைக் கூப்பிட்டு வேர்க்கடலை வாங்கினான்.

பையன் கடலையைக் கையில் கொடுத்தான். ஸ்ரீதரன் காசைக் கொடுக்கப் போனான். ஸம்பத் அதைத் தடுத்து, ''நான்தான் கொடுப்பேன். நீ ஊரிலிருந்து வந்த விருந்தாளியல்லவா?'' என்றான்.

ஸ்ரீதரன் பிடிவாதம் பிடித்தான். ஸம்பத் விடவில்லை.

கடைசியில் சம்பத் கொடுத்த காசை வாங்கிக்கொண்டு போய் விட்டான் பையன்.

வேர்க்கடலையை இருவரும் மென்றார்கள்.

''ஸ்ரீதரா! அந்தக் கடிதாசை இப்படிக் கொடு....''

''அது எதற்கு உனக்கு?'' என்று குறும்பாகச் சிரித்து அதைக் கசக்கினான் ஸ்ரீதரன்.

''அடாடா! அதைக் கொடு. சொல்கிறேன்'' என்று சொல்லி, ஸம்பத் அதை வாங்கிப் பைக்குள் போட்டுக்கொண்டான்.

''ஸம்பத்! நிஜமாகத்தான் கேட்டாயா! அதில் என்ன இருந்தது?''

''அது சிறிய விஷயத்தில் பெரிய விஷயம். வா! சாவகாசமாகச்

சொல்கிறேன்! உடனே போக வேண்டும் வீட்டுக்கு''—அவசரமாக எழுந்தான் ஸம்பத்.

''ஏன் அப்படி?''

''இப்பொழுது வந்த வேர்க்கடலைப் பையன் - வியாபாரியே இல்லை. போதுமா!''

''ஐயையோ! அப்படியா?''

''ஆமாம்! எனக்கு ரொம்ப நாளாகச் சந்தேகம்....இன்று ஊர்ஜிதமாகி விட்டது.'' வேகமாக மணலில் காலைப் பதிய வைத்து நடந்தான் சம்பத்.

''ஒன்றுமே புரியவில்லையே!''

''வாயேன்! சீக்கிரம்.''

கொஞ்ச தூரம் வேகமாக நடந்து பீச்ரோட்டின் கூட்டத்தில் புகுந்தார்கள். அப்பா! ஸம்பத் எவ்வளவு வேகமாக நடக்கிறான், வேகமாக நடந்து எதிர்ப்புற நடைப் பாதையை அடைந்து பஸ் ஸ்டாப்பில் சிறிது நின்றான். அதே சமயம் பஸ் ஸ்டாப்பில் அதே வேர்க்கடலைப் பையன் வந்து அங்கே யாரோ ஒரு வாலிபனிடம் வியாபாரம் செய்தான். ஸம்பத்தும் ஸ்ரீதரனும் அதே பஸ் ஸ்டாப்பிற்கு வந்து நின்றார்கள். அவர்கள் அங்கே வந்து சேருவதற்கும் வேர்க்கடலைக்காரன் அங்கிருந்து நகர்வதற்கும் சரியாக

இருந்தது. ஸம்பத் முகத்தைச் சுளித்துக்கொண்டான். சிறிது நேரம் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டு நின்றார்கள். பஸ்ஸில் ஒரே கூட்டம். இருவரும் எப்படியோ ஏறிக்கொண்டார்கள்.

ஸம்பத்தும் ஸ்ரீதரனும் வீட்டிற்கு வந்து சேரும் பொழுது மணி ஏழரை ஆகி விட்டது.

''அப்பா! டவுன் பஸ்ஸில் இவ்வளவு கூட்டமா?'' என்று கேட்டான் ஸ்ரீதரன்.

''தினமும் இப்படித்தான். கடற்கரைக்கு வருகிறவர்கள் எல்லாம் திரும்ப வீட்டுக்குப் போவார்கள் அல்லவா?'' என்றான் ஸம்பத்.

பங்களாவின் வாசலில் விளக்கு மட்டும் எரிந்துகொண் டிருந்தது. வாசலில் வழக்கமாக வரவேற்கும் நாய், ''ஜாக்கி'' அங்கே இல்லை.

உள்ளே நுழைந்ததும் ஸம்பத்தின் தாயார், ''முனிசாமியைப் பார்த்தாயோ?'' என்று கேட்டாள்.

''பார்க்க வில்லையே! ஏன்?..''

''ஜாக்கியை இழுத்துக் கொண்டு சாயந்தரமே போனான்....'' என்று அம்மா சொல்லி முடிப்பதற்குள் வாசலிலிருந்து, ''ஸார்!..'' என்ற குரல் வந்தது. எல்லோரும் வாசலுக்கு வந்தார்கள். கான்ஸ்டபிள் ஒருவன் வந்து நின்றான்.

''ஸார்! ஸப்-இன்ஸ்பெக்டர் ஐயா அனுப்பிச்சாருங்க!'' என்றான்.

''உன்னையா! என்ன சமாசாரம்?'' என்று கேட்டான் ஸம்பத்.

''பீரோவிலே இரும்புப் பெட்டி-சின்னப் பெட்டி வச்சிருக்கிறாராம். அதை வாங்கிட்டு வரச் சொன்னாரு..''

''ஐயா எங்கே இருக்காரு இப்போ!..''

''ஸ்டேஷன்லே தானுங்க..''

''சரி, இரு எடுத்துத் தரேன்... ஐயா கிட்ட ஒரு சேதி சொல்லணும். சொல்லுவியா?..'' என்று கேட்டான் ஸம்பத்.

''சரி! சொல்லுங்க..'' என்று விநயமாகக் கேட்டான், அவன்.

''நேத்திக்கு வந்த புதுக்கேஸிலே கொஞ்சம் தகவல் கிடைச்சிருக்காம். இன்னிக்கு ராத்திரியும் கொஞ்சம் வெளியிலே கிளம்பிப் போகணும்னு சொல்லுவியா?''

''சரிங்க..'' என்று சொல்லிக் கொண்டு அந்தப் பெட்டியை வாங்கிக்கொண்டான் கான்ஸ்டபிள். ஸம்பத் நிம்மதியாக உள்ளே வந்தான். அன்று இரவு அவன் போய்ப் பார்க்க வேண்டிய இடங்களை அவன் மனம் திட்டமிட்டது. உள்ளே அவன் வந்த சமயம், டெலிபோன் மணி 'கண கண' வென்று ஒலித்தது. ஸம்பத் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

''ஹலோ!..யார் அது?''

''ஹலோ! ஸம்பத்தானே! நான்தான் உன் அப்பா பேசுகிறேன்..''

''அப்பா, இப்பொழுதுதான் கொடுத்தனுப்பினேன்.''

''எதை?....''

''எதையா? அந்தப் பெட்டியைத்தான்....''

''பெட்டியா? என்னது?''

''நீங்க இருப்பது ஸ்டேஷன்லே தானே?''

''இல்லையே! யார் சொன்னது?''

''பின்னே இப்போ கான்ஸ்டபிள் ஒருத்தன் வந்து பீரோவிலிருந்து இரும்புப்பெட்டியை வாங்கிண்டு போனானே!''

''ஐயையோ! நீ ஏன் கொடுத்தே?..''

''நீங்க கேட்டதாகச் சொன்னான். போலீஸ் டிரஸ்ஸிலே வந்தான்.''

''அடேடே! அந்த இரும்புப் பெட்டியிலே முக்கியமான பொருள்கள் இருந்ததே!—..''

''அடேடே! இப்போதான் அவன் போனான். பார்க்கிறேன்.'' டெலிபோனை வைத்துவிட்டு ஸம்பத் அவசரமாக வாசலுக்கு ஓடி வந்தான். ஸ்ரீதரன் திகைத்து நின்றான். ஸம்பத்தின் முயற்சி வீண். அந்தப் போலி கான்ஸ்டபிள் கண்ணில் படவே இல்லை. அவன் அதற்குள் மாயமாக மறைந்து விட்டான்.

(தொடரும்)



துப்பறியும் பூனை

திருச்சி அண்ணா

பாத்திரங்கள்:

மாணிக்கம், அக்கா,
கீழ வீட்டம்மா, மேல வீட்டம்மா.

காட்சி-1

[மாணிக்கம். அக்கா. கீழ வீட்டம்மா. உள்ளே வந்த மாணிக்கம் அக்காவைப் பார்க்கிறான். அவன் முகத்திலே கோபம்.]

மா; என்ன அக்கா! வரும்போதே எள்ளும் கொள்ளும் வெடிக்குது முகத்திலே?

அ: ஏண்டா தம்பி, நீ பூனைதான் வளக்கறியா?

மா; ஆமா அக்கா. பேருதான் டைகர்னு வச்சிருக்கேன். அது புலி அல்ல. பூனைதான் அக்கா!

அ; அட போடா. நீயோ உன் டைகரோ! அந்தக் குரங்கு என்ன சேட்டை பண்ணுது, தெரியுமா?

மா: இல்லை அக்கா. என் பூனை சேட்டையே பண்ணாது அக்கா.

அ: போடா, நீயோ உன் பூனையோ! விடிஞ்சா. பால் பானையை வளைய வளைய வருது. காவலுக்கு ஒரு ஆள் போட வேண்டியதுதான் பாக்கி.

மா: நம்ம பூனைக்குப் பால் பிடிக்காது அக்கா. டீயோ காபியோ தான் சாப்பிடும். ஆகாரம் வயிறு நிறையக் கிடைக்குதோ இல்லையோ, நம்ம வீட்டு எலித் தொல்லையை ஒழிக்கறேன்னு கங்கணம் கட்டியிருக்கு இந்தப் பூனை.

அ: எலித் தொல்லையும் அப்படி அடங்கினதாகத் தெரியலையே. முந்தி எலித் தொல்லையோடு மட்டும் இருந்தது. இப்போ பூனை வேறே சேந்தாச்சு.

(மியாவ் வருகிறது)

அடேய் மாணிக்கம், பாரு, உம் பூனையை; இது இப்போ எங்கேயிருந்து வருது, தெரியுமா? அடுத்த வீட்டிலேருந்து வருது.

மா: ஓகோ. பக்கத்து வீட்டுக்கும் காவல் இருக்கா? அப்போ அடுத்த வீட்டுக்காரம்மா கிட்டே ஏதாவது சில்லறை வாங்கணும்.

அ: இங்கே தின்னுட்டு, அடுத்த வீட்டுலே என்னடா காவல்? சரியாப் பூசை வேளைக்குத்தான் இங்கே வருது.

மா: அப்படியா? போனாப் போகுது. அந்தப் பழக்கத்தை மாத்திடலாம், அக்கா.

அ: எப்படி மாத்த முடியும்?

மா: இன்னி முதல், தீனியை அடுத்த வீட்டிலே கொண்டுபோய்ப் போட்டுப் பாரு. அங்கே தின்னுட்டு, நம்ம வீட்டுக்கு ஓடி வந்து காவல் இருக்கும்!

அ: இது வேறே ஜோலியா, கெட்ட கேட்டுக்கு?

மா: ரெண்டொரு நாள் பாக்க லாமே அக்கா:

அ: பக்கத்து வீடுன்னு, பூனே அந்தப் பக்கத்து வீட்டுக்குப் போனு, என்ன செய்வே?

மா: அடடே: ஆமா, அக்கா: இதை நான் யோசிக்கவே இல்லேயே!

அ: டேய்! என் பேச்சைக் கேள். பேசாமெ பூனையை எங்கேயாவது விரட்டியடி. இது நம்மைப் பெரிய சிக்கலிலே கொண்டு விடப் போகுது. அல்லு அசல் வீடுகளிலே புகுந்து இந்தக் குரங்கு ரகளே பண்ணுதாம். சண்டைக்கு வராங்க. சமாதானம் சொல்றது பெரும் பாடாயிருக்கு.

(கீழ வீட்டம்மா வருகை)

கீ: என்னுங்க நடு வீட்டம்மா, நீங்க பூனைதான் வளக்கறீங்களா?

அ: சொல்லுடா தம்பி, பதில் சொல்லு.

கீ: திறந்த வீட்டுலே நாய் நுழையற மாதிரி, உங்க பூனே நுழையுது! நேத்து பாலேக் கொட்டிடுச்சு:

மா: எங்க வீட்டுப் பூனேக்குப் பாலேக் கண்டாலே பிடிக்காது. அக்காவைக் கேட்டுப் பாருங்க! பழையதுதான் பிடிக்கும்!

கீ: நிறுத்து! உன் விளையாட்டுப் பேச்சு போதும்! பாலேக்கொட்டுது; மோரைக் குடிக்குது; வெண்ணேயை முழுங்குது; கால் சேர் வெளக்கெண்ணெய் வச்சிருந்தேன்; அப்படியே குடிச்சிட்டுது! இனிமே, பூனையை எங்க வீட்டுலே கண்டா, காலே ஒடிச்சிடுவேன், ஓடிச்சு.

மா: சரி! சரி! போங்கம்மா.

காட்சி-2

மே: என்ன கீழ வீட்டக்கா, நடு வீட்டிலே பூனே வளருதா, இல்லே, புலி வளருதா?

கீ: ஆமா, மேல வீட்டக்கா: கோணி ஊசி போல நகத்தை நீட்டிக்கிட்டு, குறுக்கே பாயுது.

மே: ஒரு நல்ல காரியத்துக்குப் புறப்பட்டா. குறுக்கே ஓடுதே சனியன்!

கீ: வீடுகளிலேதான் ஆகட்டும். ஒரு பண்டம் போட்டபடி கிடக்குதா? பத்து நாளிலே ரெண்டு கைக்குட்டை போச்சு:

கீ: எங்கே போயிடும்? எல்லாம் நடு வீட்டுப் பூனேதான் எடுத்துக்கிட்டுப் போய்ப் பதுக்கி இருக்கும். பூனையை ஒருவேளே அப்படிப் பழக்கி வச்சிருப்பாங்களோ?

கீ: அப்படித்தான் அக்கா, நினேக்க வேண்டியிருக்கு.

மே: அந்தப் பூனே ஒழிஞ்சாத்தான். நமக்கு நிம்மதி.

கீ: ஒழிக்க வழி தேடுவோம்; விடப்படாது.

(மாணிக்கம் வருகை)

மா: அட: மேல வீட்டம்மாவா! புஸ்ஸி குரல் கேட்டு, இங்கே வந்தேன்.

மே: என் குரல், பூனே மாதிரி யாவா இருக்கு? உடம்பு அடாடாங்குதா? நேத்து எங்க வீட்டிலே சோப்பு திருட்டுப் போயிருக்கு. உன் பூனேதான் ஜவாப்பு!

மா: பூனே மேலே சந்தேகமா உங்களுக்கு? ஒருவேளே, சோப்புப் போட்டுக் குளிக்க எடுத்துப் போயிருக்குமோ?

மே: அட சே, கிண்டல் பேச்சும், நீயும்:

மா: பின்னே என்னம்மா? தண்ணியைக் கண்டாலே, பூனே ஓட்டம் பிடிக்கும், இது சோப்பை எதுக்காக எடுக்கப் போவுது?

கீ: எடுத்துக்கிட்டுப் போனு, சொந்தக்காரர்களுக்கு உபயோகப் படுது. பக்கத்து வீட்டுப் பண்டங்களே எடுத்துப் போக, பழகி இருக்குது பூனே.

மே: அப்படிப் பழக்கி வச்சிருக் காங்க, படுபாவிகள்!

மா: இந்தாம்மா, இன்னொரு தடவை அப்படிப் பேசாதீங்க. எங்க வீட்டுப் பூனை திருடாது. உங்க வீட்டுத் திருட்டைத் துப்ப றிய வந்திருக்கும், ஒருவேளை..

மே: இங்கே யாரும் திருட்டு நடத்தலே. வாயடக்கிப் பேசு!

(அக்கா வருகை)

அ: இங்கே என்ன ரகளை?

மே: இந்தாங்க நடு வீட்டம்மா: உங்க தலை துவட்டிதானே இது, பாருங்க:

அ: ஆமா: நாலு நாளாத் தேடிக் கிட்டு இருக்கேன். உங்க வீட் டுக்கு எப்படி வந்தது?

மே: உங்க பூனை செய்த வேலை தான். எங்க மேலே படா பழி போடத்தான் பூனை இந்தச் சவுக் கத்தை, இங்கே கொண்டுவந்து போட்டிருக்கு:

அ: கோவிக்காதிங்க அம்மா: இதோ பாருங்க, கீழ வீட்டம்மா, இது உங்க கைக்குட்டைதானா?

கீ: பாத்தீங்களா மேல வீட் டக்கா! முந்தி சொன்னேனே. அந்தக் கைக்குட்டைதான்.

மே; அட படுவெட்டுப் பூனையே. இந்த மாதிரி எத்தனை பண்டம் இடம் மாறியிருக்கோ!

மா: இந்தாங்க கீழ வீட்டம்மா, ரொம்பப் பேசாதீங்க. எண்ணெய் சிக்குப் பிடிச்ச கைக்குட்டையைப் பூனை எதுக்கு வந்து தொடப் போகுது: எங்கே, அக்கா பூனை? அதைக் கேட்டா விவரம் புரிஞ்சி போகுது! புஸ்ஸி! புஸ்ஸி!

அ: அதோ பாருடா..உத்த ரத்து மேலே தவம் கிடக்கு..

மா: மோட்டு வளையைப் பாக் குதே, அங்கே என்ன அதிசயம் இருக்கு? வாடா புஸ்ஸி டியர்!.. வா, வீட்டுக்குப் போகலாம்!.. அப்படியே வந்து, சேரு! நான் முன்னலே போகிறேன்...

[மாணிக்கம் போகிருன்.. அக்கா பின் தொடரு கிருள்]



''நான் காட்டிலாகாவில் வேலை செய்தபொழுது ஒரு யானை என்னைத் துரத்திக் கொண்டு வந்தது பாருங்க!''

''அடெடெ! உங்களைக் கூடவா யானை விரட்டியது?''

மே: நடுவீட்டம்மா..அந்தத் திருட்டுப் பூனை நாளை இங்கே வந்தா, வெட்டுப் பழிதான் வந்து சேரும்..நினைவிருக்கட்டும்..

காட்சி-3

[அக்கா - மாணிக்கம் - கீழ வீட்டம்மா - மேல வீட்டம்மா]

அ: ஏண்டா தம்பி, நீ அந்தப் பூனையை விரட்டப் போறியா, இல்லையா? எனக்கு ஏண்டா இந்தப் பிடுங்கல்?

மா: என்ன அக்கா!..உன்னையும் பிராண்டிப் பிடுங்குதா பூனை? கண்டிக்கிறேன் அதை! வரட்டும் பூனை!..

அ: அட போடா நீயோ, உன் விளையாட்டுப் புத்தியோ! நாலு நாளா மேல வீட்டம்மா பிடுங்கி எடுக்கறாங்கடா!

மா: எதுக்காக அக்கா?

அ: அவங்களோட மோதிரத்தைக் காணலையாம். 'பூனைதான் எடுத்திட்டுது; நீங்கதான் ஜவாப்பு. விலையைக் குடுங்க, இல்லாட்டி அது போல மோதிரம் செய்து கொண்டாங்க' அப்படின்னு மல்லுக்கு நிக்கறாங்க..

மா: பூனைதான் எடுத்ததுன்னு, எப்படி நிச்சயமாச் சொல்ல முடியும்? என்ன அத்தாட்சி இருக்குதாம்?

அ: அது எனக்குத் தெரியாது. உன் பாடு. அவங்க பாடு!..

மா: கோவிக்காதே அக்கா!.. பூனையைக் கேட்போமே..விவரம் புரியுது..

(பூனை வருகிறது)

மா: அடடே! ஏன் காலிலே ரத்தம் புஸ்ஸி? எலி வேட்டை பலமோ?

(மேலவீட்டம்மா வருகை)

மே: இந்தாம்மா, இதோ பாருங்க, பூனை பண்ணி இருக்கிற ரத்தக் களறியை..

மா: பூனையா பிராண்டியிருக்கு!.. என்னாங்க அதிசயமாயிருக்கு!..கையிலே காயத்தையே காணும்; ரத்தம் மட்டும் வருதே!..

மே: பூனையைப் பிடிச்சேன்.. மூஞ்சியைப் போட்டுக் கையிலே தேச்சிட்டு ஓடி வந்திருக்கு..அது போவட்டும், என் மோதிரத்துக்கு என்ன வழி?

மா: நடந்த சங்கதியைச் சொல்லுங்கம்மா..

மே: முந்தா நாள், நான் எண்ணெய் தேச்சு முழுகினேன்..

மா: முந்தா நாள் என்ன கிழமை? வெள்ளிக்கிழமையா? சரிதான். செவ்வாய், வெள்ளி பெண்கள் நீராடும் நாள்தான்.. சரி, சொல்லுங்கம்மா கதையை..

மே: கதை இல்லை, நிஜமா நடந்த சங்கதியைத்தான் சொல்றேன், தம்பி.

மா: சரி இருக்கட்டும். சும்மாச் சொல்லுங்க.

மே: அப்போ, மோதிரம் தவறி எண்ணெய்க் கிண்ணத்திலே விழுந்தது! அதை எடுத்து, அப்படியே பக்கத்து ஸ்டாண்டிலே வச்சிருந்தேன். கொஞ்சநேரம் பொறுத்துப் பாக்கறபோது, மோதிரம் மாயமா மறைஞ்சிருக்கு; உங்க பூனைதான் அங்கே வட்டமிட்டுது! அந்த மோதிரம், உங்க கைக்குத்தான் வந்திருக்கும்.

மா: அக்கா, உன் கையைக் காட்டேன்!..இருக்கா, பாருங்க அம்மா..

மே: கையிலே இல்லாதபோனா, வேறே எங்கேயாவது இருக்கும், எனக்கு அதெல்லாம் தெரியாது.

அந்த மோதிரத்துக்கு நீங்கதான் ஜவாப்பு..

மா: இது என்ன பெரிய காரியம்? பூனையை விட்டே ஜவாப் சொல்லச் சொல்றேன். எங்கே அக்கா பூனை?..

அ: அதோ பாருடா, உயர மோட்டு வளையிலே தாவிக்கிட்டுக் கிடக்கு!..

மா: அட, நம்ம பூனை துப்பறியுது!..ஏணியைக் கொண்டா அக்கா..கொஞ்ச நேரத்திலே வெட்ட வெளிச்சமாயிடும்.

[மாணிக்கம் ஏணியில் ஏறுகிறான், கீழ வீட்டம்மா வருகிறாள்]

கீ: இந்தாங்கம்மா, எங்க வீட்டுத் துண்டு..

அ: வாங்க கீழ வீட்டம்மா! என்ன சொன்னீங்க?

கீ: எங்க வீட்டுத் துண்டைக் காணலை! அதுக்கு வழி சொல்லுங்க!..

மா: (உயர இருந்தபடியே) வாங்க கீழ வீட்டம்மா!..நம்ம துப்பறியும் பூனையோட புண்ணியத்துலே, இப்போ எல்லாத்துக்கும் வழி பிறக்கப் போகுது;

கீ: எங்கேயிருந்து வழி பிறக்கப் போகுது? மோட்டு வளையிலேருந்து பிறக்குமா?

மா: (குதூகலமாக) ஆமா; பிறந்தாச்சு, வெற்றி, அக்கா வெற்றி!

அ: தம்பி, ஜாக்கிரதை! உத்தரத்து மேலே நில்லு. குதிக்காதே!..

மா: வெற்றி அக்கா! பூனை பிடிச்சிட்டுது எலி ராஜாவை!.. பாரு அக்கா!..

அ: அட என் சாமி! எவ்வளவு பெரிய முரட்டு எலி!

மா: எலி ராஜா அரண்மனையைச் சோதனை போடுவோம்..பெரிய பொந்து அக்கா, கீழ வீட்டுப் பக்கம்! ஆகா, மேல வீட்டுப் பக்கமும் திரும்புது வழி! வீட்டுக்கு எலி ராஜா வழி திறந்து வச்சிருக்கு!! கரை மேலேயே பாதை இருக்கு, மூணு வீட்டுக்கும்! சபாஷ்!

அ: (பயத்துடன்) ஜாக்கிரதை மாணிக்கம்!..குஷியில் குதிக்காதே! கீழே விழுந்திடுவே!..

மா: அக்கா, இதோ பாரு, துண்டு!..

(துண்டு கீழே விழுகிறது)

கீ: இது என் துண்டுதான்.

மா: இதோ உங்கள் கர்ச்சீப்பும் இருக்கு...இதென்ன? அடி சக்கை மோதிரமா? மேல வீட்டம்மா, இதுதானு உங்கள் மோதிரம், பாருங்கம்மா?

[கர்ச்சீப், மோதிரம் கீழே விழுகின்றன]

மே: (மோதிரத்தைக் கவனித்து விட்டு) ஆமா தம்பி, இந்த மோதிரம்தான்! அட பாவி! இந்த எலி பண்ணின வேலையா இவ்வளவும். என்ன கூத்து இது!

மா: (இறங்கி வந்து) எலிக்கும் எண்ணெய்க்கும் கொண்டாட்டம், இல்லையா அக்கா? எண்ணெயிலே விழுந்த மோதிரத்தை இழுத்துக்கிட்டுப் போய், வளையிலே பதுக்கி வச்சிருக்கு எலி ராஜா. நம்ம துப்பறியும் பூனை, இந்தப் பதுக்கலைக் கண்டு பிடிச்சிருக்கு.

மே: தம்பி, உன் துப்பறியும் பூனை, நல்லா இருக்கட்டும். இந்த விவரம் புரியாமெ கண்டபடி பேசிட்டேன். நடு வீட்டம்மா, என்னை மன்னியுங்க.

கீ: ஆமா, அக்கா. என்னையும் மன்னிப்பிங்களா?

மே: நல்ல பூனை அக்கா, உங்க பூனை! இந்த எலிக்காகத்தான் இந்தப் பூனை இத்தனை நாளும் அலைஞ்சிருக்கு. அக்கா, இனிமே உங்க பூனை தாராளமா வரட்டும் எங்க வீட்டுக்கு. பாலும் சோறும் வைக்கிறேன்.

கீ: கீழ வீட்டுக்கும் வரச் சொல்லுங்க அக்கா. உங்க பூனைக்கு டீயும் பிஸ்கட்டும் தருவேன்.

மா: அக்கா, வெற்றி விழாக் கொண்டாட வேணும். நல்ல விருந்து வைக்கணும், நம்ம துப்பறியும் பூனைக்கு. எல்லாம் தயாராகட்டும், அக்கா!

[எல்லாரும் சிரிக்கிறார்கள்]

திரை!

பணம் வேண்டாம்

மீரா

மாலைப் பொழுது. ஆதவன் மலை எனும் வாயிலில் நுழையலானான். நான் ஊர் எல்லையிலிருந்த காளி கோயிலை நோக்கிச் சென்றுகொண் டிருந்தேன். கால் தான் நடந்துகொண் டிருந்ததே ஒழிய மனம் என்னவெல்லாமோ எண்ணியவாறு இருந்தது.

பணம்! இந்தப் பணம் மட்டிலும் குறைவுறாது நம் கையில் எப்பொழுதும் இருந்தால் இவ்வுலகிலே எவ்வளவு சாரியங்களைச் சாதிக்கலாம்? சினிமாவிற்குச் செல்லலாம், கிரிக்கெட் மாட்சுப் பார்க்கலாம், ஹாக்கி மட்டை வாங்கலாம். பாரி பெப்பர்மின்ட் சுவைக்கலாம். இவைகளையெல்லாம் நான் சாதிக்கக் கூடிய காரியங்களாக எண்ணவில்லை.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் வள்ளுவர் பெருமான். மேலே கூறிய காரியங்களால் புகழ் அடைய முடியாது. பின் என் செய்வது? தான தருமம் செய்தல் வேண்டும். பிறர் துன்பம் களைந்தால் அவர்கள் மனமாற நம்மை வாழ்த்துவது ஒன்றே போதுமானது. புகழ்ச்சி வேண்டாம். 'வலக்கையால் கொடுப்பதை இடக்கை அறியக்கூடாது' என்பார்கள். ஆகையால் பிறர் நம்மைப் புகழ்வதுகூட வேண்டும் என்பதில்லை.

இவ்வாறெல்லாம் மனம் எனும் பெரும் குரங்கை அலையவிட்டவாறு நான் குடியானவர் வீதி வழியே கோயிலை அணுகினேன்.

'ஐயோ! இவ்வேழை மக்கள் குடிசைகளில் வாழ்ந்துகொண்டு படும் துன்பங்களை என்னவென்று உரைப்பது? சிலர் குத்தகை எடுத்துப் பிழைக்கிறார்கள். மற்றும் சிலர் தினசரி கஞ்சிக்குக்கூடத் திண்டாடுகிறார்கள். நம்மிடம் மட்டி



னும் பணம் இருந்தால் இவர்களுக்கென்றே சிறுசிறு நிலங்கள் வாங்கி வழங்கி, இவர்கள் வாழ்க்கை நிலைமையை உயர்த்தலாமே!'

காளி பணக்காரக் காளி. ஊரில் உள்ள எல்லா மக்களுக்கும் அவள் தான் வரப் பிரசாதி. இந்த நினைவு வந்தவுடன், ''தேவி! பையிலிருந்து எடுக்க எடுக்கப் பணம் வருமாயின் எத்துணை ஏழைகளுக்கு வழங்கலாம்! இந்தச் சிறு வரம் இந்த ஏழைக்கு அருளாயா?'' என இரைஞ்சினேன்.

பொழுது சாய்ந்து விட்டது. கோயிலுக்குள் சென்று தேவியை வணங்கிவிட்டு உட்கார்ந்தேன்.

அங்கே பிச்சைக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் கோயில் வாயில்தானே வாசஸ்தலம்?பாவம்! அவர்களுக்கு வாரி, வாரி வழங்க முடியாவிட்டாலும் ஏதோ நம்மாலானதைச் செய்வோம் என்று எண்ணியவாறு பையில் கை விட்டேன்.

என்ன அதிசயம்! கை ஒரு கற்றை நோட்டுடன் வெளியே வந்தது. என் பையில் இருந்ததெல்லாம் ஓரணா, இரண்டணா நாணயங்கள்தான்! பிறகு? மீண்டும் பையில் கைவிட்டேன். ஆகா! மறுபடியும் ஒரு கற்றை நோட்டு!'

சட்டென்று எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஆஹா! தேவி தான் இந்த வரத்தை அருளியுள்ளாள். எனக்கு உண்டான ஆனந்தத்திற்கோர் அளவேயில்லை.

நேராகப் பிச்சைக்காரர்களிடம் சென்றேன். அவர்களை நோக்கி ஒரு பிரசங்கமே செய்தேன். அதன் சாராம்சம் இதுதான்— அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் கொடுப்பேன். அவர்கள் அதைக்கொண்டு கடைவைத்து நடத்தியோ, அல்லது நிலம் வாங்கி உழைத்தோ, கண்ணியமான முறையில் வாழவேண்டும்.

என் உபதேசத்தைக் கேட்டுவிட்டு, அவர்கள் ஜாடையாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு, ''சாமி! எங்களுக்கு உங்கள் பணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். எங்களைச் சும்மா விட்டால் போதும்'' என்று கூறி, திரும்பிப் பார்க்காது நடையைக் கட்டினர். ஆனால் போகும் போது, ''கள்ள நோட்டு அடிச்சிட்டு இப்படித் திண்டாடுகிறார் போலிருக்கு ஐயா! அதான் நம்ம தலையில்



வைத்துக் கட்டப் பார்க்கிறார்'' என்று கூறியது என் காதில் விழுந்தது. 'ஐயோ! இது என்ன நாம் நல்லது செய்தாலும், இவர்கள் இப்படிக் கூறுகிறார்களே' என்று நான் திகைத்தேன்.

குடியானவர் வீதியில் நுழைந்து, குடிசை வாயிலில் அமர்ந்திருந்த ஒருவனை அணுகினேன். அவன் க்ஷேமத்தை விசாரித்தேன். ''அதை ஏன் கேட்கிறீர்கள்! போன வருசம் மகளுக்குக் கண்ணாலம் கட்டிக் கொடுத்தேன். ஆயிரம் ரூபா கடன். கடனை அடைக்க நிலத்தை வித்தேன். ஐநூறுகூட தேறலே. தினசரி கஞ்சிக்குக்கூட லாட்டரி அடிக்குது, ஐயா!'' என்று முடித்தான்.

உடனே, ''இதோ பார். உன் கடனை அடைக்கவும், நீ மறுபடியும் நிலம் வாங்கிச் சுகமாகக் காலம் தள்ளவும் நான் வேண்டிய பணம் தருகிறேன்'' என்றேன்.

''நிசமாகவா சாமி?'' என்று விழித்தான். பிறகு, ''இருங்க சாமி, எம் பெண்சாதிகிட்ட கேட்டு வர்றேன்'' என்று போனான்.

அடுத்த சில நிமிஷங்களில் உள்ளிருந்த ஒரு பெண் குரல், ''இதோ பாரு, என்ன பணமோ என்னமோ, யாரு கண்டாங்க? இன்னிக்குப் பணத்தைக் கொடுக்கறேன் என் பாங்க. நாளைக்கு நம்மை என்ன பண்ணலாம்னு பாப்பாங்க. பிறத்தியான் வீட்டுப் பணம் நமக்கு வேண்டாம். பட்டினி கிடந்தாலும்..உம்.. என்ன? பணம் வேண்டாம்னு சொல்லு. தெரியுதா?'' என்று கத்துவது கேட்டது.

அதற்கு மேலும் அங்கிருக்க என் மனம் ஒப்பவில்லை. 'அட கடவுளே! இந்த ஏழைகளுக்கு நற்புத்தி வராதா? தானாக வீடு தேடி வரும் லட்சுமியைக் காலால் உதைத்துத் தள்ளுவாருமுண்டோ?'

இனி, கடைசி முறையாக ஒரு பெரிய பணக்காரரிடமே செல்ல உத்தேசித்தேன். ஒரு கம்பெனி முதலாளியிடம் போய் அவருடன் முதல் போடுவதாகக் கூறி, கம்பெனியை விரித்து, வேலையில்லாமல் திண்டாடுவோருக்கு வேலையாவது சம்பாதித்துக் கொடுக்கலாம் என்ற நல்லெண்ணத்துடன் கம்பெனிக்குள் சென்று முதலாளியின் அறையில் நுழைந்தேன்.

அவர் என்னை வரவேற்று, வந்த விஷயத்தை விசாரித்தார். நான் சமாசாரத்தைக் கூறியதும், ''எவ்வளவு போடுகிறீர்கள்?'' என்றார். ஒரு லக்ஷம் போடுவதாகக் கூறினேன் நான்.

முதலாளி என்னை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு, ''ஸார், நீங்கள் சற்று வெளியே காத்திருக்கிறீர்களா? நான் சற்று யோசித்து என் முடிவைக் கூறுகிறேன்'' என்றார். நானும் வெளியே காத்திருந்தேன்.

அரைமணி நேரம் சென்றது. முதலாளி வெளியே வருவதற்கும் வாயிலில் போலீஸ் வான் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்தானமும், இரண்டு ஜவான்களும் இறங்கி வந்தனர்.

முதலாளி இன்ஸ்பெக்டரை வரவேற்று, ''ஸார்! இவன்தான் நான் கூறிய பயல். சொர்ணமுத்து நாடார் வீட்டில் லக்ஷம் ரூபாயைத் திருடிவிட்டு, என்னிடம் அதே ரூபாயைக் கூட்டுப் பணம் போடுவதாகச் சொல்கிறான். எமகாதகப் பயல்!'' என்றார்.

நான் செய்வதறியாது மிரண்டேன். ஆடு திருடிய கள்ளன் போல் நான் விழிப்பதைப் பார்த்துவிட்டு இன்ஸ்பெக்டர், ''ஏய் முந்நூற்று நாலு! ஐயா கையில் காப்பு மாட்டு'' என்றார். நான், ''தேவி, இந்தப் பணம் எனக்கு வேண்டவே வேண்டாம்'' என்று அலறியவாறு சாய்ந்தேன்.

கண் விழித்தபோது எதிரே போலீஸ் இன்ஸ்பெக்டரையோ கம்பெனி முதலாளியையோ காணவில்லை. நான் காளிகோவில் மண்டபத்தில்தான் சாய்ந்திருந்தேன்.

நல்லவேளை! எல்லாம் பிரைமையாயிற்றே. பணமும் வேண்டாம், புகழும் வேண்டாம் என்று வீட்டை நோக்கி நடையைக் கட்டினேன்.

கதை: 'ஆர்வி'

கடற் புலி

சித்திரம்: ஸாமி

நீ பெண் என்பது இன்றைக்கு அல்ல, உன்னைக் கப்பலில் பார்த்தபோதே தெரியும். சாமானியப் பெண்ணல்ல, இளவரசி என்பதும் எனக்குத் தெரியும்!
ஹா! நீங்கள் பொல்லாதவர்!
சில நாட்களில் வானளாவ நிற்கும் மரங்கள் வெட்டப்படுகின்றன . . . .
யானைகள் வெட்டிய மரங்களை இழுத்து வந்து கடற்கரையில் தள்ளுகின்றன.
காட்டுமிராண்டி பெண்கள் உறிமட்டை நாரில் கயிறுகள், வடங்கள் திரிக்கிறார்கள்.

(தொடரும்)



சாட்சிக் கடிகாரம்

எஸ். விசுவநாதன்

கூடத்தின் நடுவில், சுவரோடு ஒட்டிய அலமாரி; சாவித் துவாரத்தில், சாவிக் கொத்தோடு செருகப்பட்டிருந்தது. அடுத்தாற் போல் மேசையிலிருந்த அலாரம் கடிகாரத்தின் டிக் டிக் ஒலி மட்டுமே தெளிவாக ஒலித்துக்கொண்டிருந்தது. அறையில் நிலவிய அமைதிக்கு அது பயங்கரமாகவே இருந்தது. சந்தானம் அலமாரியையே பார்த்தான். அடுக்களையில் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தாள் அத்தை; அத்தையின் கணவர் ஆபீசிலிருந்தே இன்னும் வரவில்லை..டிக் டிக்..டிக் டிக்....

'எடுத்துவிட்டால் என்ன? மூன்றே ரூபாய்தானே!' என்றது மனத்திலிருந்து ஒரு குரல்.

'அம்மாவும் அப்பாவும் இல்லாத நம்மை ஆதரவுடன் வளர்க்கும் அத்தைக்கா நாம் துரோகம் செய்வது?' என்றது மனத்தின் மற்றொரு குரல்.

மறுபடியும் அலமாரியின் சாவிகளைப் பார்த்தான் சந்தானம். எளிதாகத் திறந்துவிடலாம். மூன்று ரூபாய்! ஆகா, நெடுநாள் ஆசையான ஒரு 'ஏ-ஒன்' ஓட்டல் டிபனும், 'ஒன் போர்ட்டீன்' - டிக்கட்டில் ஒரு அபாரமான சினிமாவும்! ஆகா, மூன்றே ரூபாய்....

அலமாரியை நோக்கிச் சிறிதே நகர்ந்தான் சந்தானம். 'வேண்டாம்..துரோகம்!' என்பதுபோல மனம் படபட் என்று அடித்துக் கொண்டது; மேசைக் கடிகாரத்திலிருந்தும் அதே ஒலி..டிக் டிக்..டிக் டிக்....

அப்படியே நின்றான் சந்தானம்.

அந்தக் கடிகாரத்தின் கழுத்தைத் திருகிப் போட்டுவிட வேண்டும் போல் அவன் மனத்தின் ஆத்திரம் கொப்புளித்தது. கடிகாரத்தின் கழுத்தைத் திருகிப் போடலாம். உள்ளிருந்து சதா அறிவுறுத்தும் மனச்சாட்சியின் கழுத்தை?

'ஹூம்..மூன்றே ரூபாய்! அவர்களுக்குத் தெரியவா போகிறது? வைக்கும்போதும் எடுக்கும்போதும் எண்ணி எண்ணியா பார்க்கிறார்கள்?'



பையன்: (கடிதம் எழுதிக் கொண்டே) மாமா அவர்களுக்கு நமஸ்காரம். க்ஷேமம்: தங்கள் க்ஷேமங்களுக்குப் பதில்: நிற்க.; அப்புறம் என்னப்பா.

பெரியவர்: அடேய் மடையா. பெரியவாளுக்குக் கடுதாசி எழுதும்போது 'நிற்க' அப்படின்னு போடக் கூடாதுடா; 'உட்கார' அப்படின்னு போடு.

'அதற்காக? எடுத்துவிடுவதா? ஐயோ, பாவம்! ஆதரவுடன் வளர்க்க யாரும் இல்லையே என்று, உண்ணச் சோறும் உடுக்க உடையும் உள்ளப் பண்பாட்டிற்குக் கல்வியும் அளிக்கும் அத்தைக்கும், அவள் கணவருக்கும் துரோகமா? சீ..சீ!' என்று கூறியது மறுகுரல் - அது மறுப்புக் குரல்!

சந்தானம் அப்படியே நின்றுவிட்டான்; கால் கட்டை விரலைஅழுத்தமாக ஊன்றி நின்றுவிட்டான். கடிகாரத்தின் ஓசை....டிக் டிக்.. டிக் டிக்..அவன் மனத்திலிருந்தும் அதே ஓசை..பட் பட்..பட்..ஒரே நடையில், ஒரே கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒலிகள்....

சந்தானத்தின் மனத்தில் சபலம் தட்டியது. பெரிய வீதியில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருக்கும் பிரபல ஓட்டலில், நடுநாயகமாக நிற்கும் சிற்றுண்டி அலமாரி அவன் மனக்கண்முன் நின்றது. நாவில் நீர் ஊறியது. 'எடு, எடுத்துவிடு.. இதுதான் தருணம்..அத்தை இப்போது வரமாட்டாள். உன் ஆவலைத் தீர்த்துக்கொள்ள இதுதான் சமயம்..போ,எடு..மூன்று ரூபாய் தான்! ம்..எடு, எடு, எடு!' என்று ஊக்கியது மனத்தின் ஒருபுறம்.

சந்தானம் அழுந்திய பாதங்களைத் தூக்கி ஓரடி வைத்தான்.

'வேண்டாம்! வேண்டாம்!' என்று அலறுவதுபோல் டிக்..டிக்.. டிக்..டிக்..என்று கடிகாரம் பயங்கரமாக நின்று நின்று எச்சரிக்கை செய்துகொண்டிருந்தது.

கடிகாரத்தைத் தூக்கி எங்காவது போட்டு உடைத்துவிட வேண்டும் என்று எண்ணினான் சந்தானம். மனச்சாட்சியின் குரலைப்போல் வெகு அருகில், அறிவிப்பாக ஒலிக்கிறதே அது!

அப்படியே நின்றான் சந்தானம். மனம் பட்பட்டென்று பயங்கரமாக அடித்துக்கொண்டிருந்தது... 'வேண்டாம்...வேண்டாம்...'

'வேண்டாமாவது! பின் எப்படி அந்த உயர்ந்த வகுப்பில் 'ஸ்டைலா'க அமர்ந்து சினிமா பார்ப்பதாம்? சங்கர் கபே லட்டுவையும், ஜிலேபியையும் எப்படி ருசி பார்க்கிறதாம்? எடு...எடு...இதுதான் சமயம் ... போ ... அஞ்சாதே ...!' மனத்தில் ஒரு குரல் கூவியது. காரியம் சாதிப்பதில் அதற்கு ஏன் அத்தனை ஆர்வம்? 'வேண்டாம், வேண்டாம்!' என்று அலறியது மனத்தின் மறுபுறம்.

டிக்..டிக்..டிக் டிக்..கடிகாரத்தின் நிதானமான ஒலி அவன் மனக்குரலைப் போலவே பயங்கரமாக மிக அருகில் கேட்டது.

'எடு..எடு!' என்று ஒரு புறம்.

மூளைக்கு வேலை



இங்கே கொடுக்கப்பட்டுள்ள E என்ற எழுத்தை நான்கு பாகமாக வெட்டி, அவைகளை இஷ்டப்படி ஒன்று சேர்க்கலாம். ஆனால் ஒரு சதுரம் உண்டாக வேண்டும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்.

ஏ. கே. வி. சேலம்.

(விடை: வேறு பக்கம்)

‘வேண்டாம், எடுக்காதே!’ என்று மற்ளுெரு புறம்!

சந்தானம் துணிந்து அலமாரியை நெருங்கினன். சாவியை அப்படியே துவாரத்தில் ஒரு புரட்டுப் புரட்டினல்...‘ஆகா, திறந்துவிடலாம்! பிறகு... அந்த எவர்சில்வர் கிண்ணத்திற்குள் அத்தை பத்திரமாக வைத்திருக்கும் ரூபாயிலிருந்து மூன்று ரூபாய்...மூன்றே ரூபாய்! ஆகா...எடு, எடுத்துவிடு! அத்தையாளுல் என்ன? ஆதரவு தந்தால் என்ன? ம், எடு..எடு..இதுதான் சமயம்...’

சந்தானம் அடி அடியாக எடுத்து வைத்தான். ‘பட் பட், பட்பட்’ என்று ஒரே நிலையில் அடித்துக் கொண்டிருந்தது மனம். எடுக்காதே..எடுக்காதே என்று எச்சரிப்பதுபோல் பயங்கரமாக அடித்துக் கொண்டது டிக்டிக்..டிக்டிக்—செவியில் வந்து தாக்குவதுபோல் ஒலித்தது கடிகாரம். சந்தானம் சினத்துடன் அதை ஏறிட்டு நோக்கினன். பைத்தியம் பிடித்த கடிகாரம்..நினைத்தபோதெல்லாம் கிர் கிர் என்று சரியாக அலாரம் வைத்ததுபோல் அலறும் கிறுக்குப் பிடித்த கடிகாரம்.

சட்டென்று நின்ருன் சந்தானம். மனத்தின் அலறலையும், கடிகாரத்தின் எச்சரிக்கையையும் அவனுல் பொறுக்க முடியவில்லை.

‘எடு..எடுத்துவிடு, உன் இன்பத்திற்குத்தானே! எடு...’—சந்தானம் பட்பட்டென்று துடிக்கும் இதயத்துடன் அலமாரியை நெருங்கினன்.

சாவியை மெதுவாக ஒரு புரட்டுப் புரட்டினன்..

உள் மனத்தின் கூக்குரல் ஒரு புறம்! வெளிக் கடிகாரத்தின் நிதானித்த ஓசை மறுபுறம்!

அலமாரியைத் திறந்துவிட்டான். கையை உயர்த்திக் கிண்ணத்தையும் எடுத்துவிட்டான்...இதோ... பட்பட்..பட்.-.டிக்டிக்.-.டிக்டிக்... ரூபாய் நோட்டுகளிலும் சில்லறையிலும் அவன் விரல்கள் பட்டன...

கிர்ர்ர்....ர்....ர்....

அலாரம் அலறியது, யாரோ காதைத் திருகிவிட்டது மாதிரி அத்தை ஓடி வந்தாள்.

“அட பாவி! எத்தனை நாளாகடா இந்த வேலை..?” என்று கூவிவிட்டாள்.

சந்தானம் கிண்ணத்தை நழுவ விட்டான்.

“என்னை மன்னித்துவிடு அத்தை!” என்று கதறிக் கொண்டே அவள் காலில் விழுந்தான் சந்தானம்.

இதுவரை அவன் தீச்செயலைத் தடுக்க இயலாதிருந்த மனச்சாட்சியின் குரலைப்போல், அலாரம் அலறிக்கொண்டிருந்தது! ••

பொழுது போக்கு



1. கோமாளி மேலே தாவுகிறான். மறைந்துள்ள பொருளைக் கண்டுபிடி.



2. எண்களை வரிசைப்படி ஒன்று சேர்த்துப் பார்.



3. எழுத்துக்கள் இடம் மாறியுள்ளன. வரிசைப் படுத்து.

4. மழையில் அழிந்துபோன பாகங்களைச் சேர்த்துப் படி.

5. சுலபமாகச் சித்திரம் வரையும் வழி.

—ரகமி.



விடைகள் வேறு பக்கம்:

திருநீலகண்டர்

'கிங்கரன்'

திருநீலகண்டர் குயவர் குலத்திலே பிறந்த பெரியார். தில்லையம்பதிதான் அவருடைய பிறந்த ஊர். அவர் தில்லை நடராஜப் பெருமானிடம் மாறாத பக்தி கொண்டவர். ஆலகாலம் உண்ட சிவபெருமானின் கண்டத்தை எப்பொழுதும் நெக்குருகப் பாடி மனம் உருகுவார். இதனால் அவரைத் திருநீலகண்டர் என ஊரார் அழைத்தார்கள்.

ஊழ்வினை காரணமாக அவர் ஒரு சமயம் பொதுமகள் ஒருத்தியை நாடிச் சென்றார். இது அவருடைய மனைவிக்குத் தெரிந்தது. அவள் மனம் மிக வருந்தினாள். இதனால் திருநீலகண்டர் மனம் மாறியது. ஆனால் அன்று முதல் அவர்கள் ஒருவரை ஒருவர் தீண்டுவதில்லை என்று உறுதி செய்துகொண்டார்கள். ஆயினும் இல்லறம் இனிதே நடந்து வந்தது. சிவபெருமானிடத்தில் குறையாத பக்தி செலுத்திவந்தார்கள். இளமை இவ்வாறே கழிந்து முதுமை வந்தடைந்துவிட்டது.

இவர்களின் பெருமையை உலகுக்கு உணர்த்தக் கருதினார் இறைவன். அவர் சிவனடியார் வேடம் பூண்டு, கையிலே திருவோடு ஏந்தி, திருநீலகண்டர் வீட்டுக்கு வந்தார். திருநீலகண்டர் சிவனடியார் வேடத்தில் வந்த சிவபெருமானை வரவேற்று உபசரித்தார்.

சிவனடியார் உண்டு களைப்பாறி விடைபெறும் வேளை வந்தது. அவர் திருநீலகண்டரைப் பார்த்து, "அப்பா! இந்தத் திருவோடு மிகவும் உயர்ந்தது இது இப்போது உன்னிடம் இருக்கட்டும். நான் மீண்டும் வரும்போது திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்!" என்று கூறி அவரிடம் திருவோட்டைக் கொடுத்தார்.

திருவோடு என்றால் தெரியுமல்லவா? அதுதான் அடியார்கள் பிட்சை வாங்கும் பாத்திரம். இது மண் ஓட்டினால் ஆனது. அந்த அடியார் கொடுத்த ஓட்டினைத் திருநீலகண்டர் வாங்கி உள்ளே வைத்தார்.

சில நாட்கள் கழிந்தபின் மீண்டும் சிவனடியார் திருநீலகண்டரின் வீட்டை யடைந்தார். திருநீலகண்டர் செய்த உபசாரங்களை யெல்லாம் பெற்றுக்கொண்டார்.

வந்த காரியம் முடிந்தவர்போல் எழுந்து, "அப்பா, திருநீலகண்டா! முன்பு நான் கொடுத்திருந்தேனே- அந்த ஓட்டை எடுத்து வா!" என்றார். வைத்த இடத்தில் ஓடு இருந்தால்தானே! சிவபெருமான் திருவுளப்படி அந்த ஓடு வைத்த இடத்தில் இல்லாமல் மறைந்து போய்விட்டது.

திருநீலகண்டர் தேடாத இடம் பாக்கியில்லை. அவர் மனைவியாரும் எங்கெல்லாமோ தேடிப் பார்த்தாள். ஓட்டைக் காணாமல் திருநீலகண்டர் கையைப் பிசைந்து கொண்டு நின்றார்.

"எங்கே நான் கொடுத்த ஓடு?"

"அதைக் காணவில்லை, சுவாமி. அதற்குப் பதில் வேறு பாத்திரம் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினார் திருநீலகண்டர்.

"திருடா! மறைக்கிறாயா? எனக்கு ஏன் உன் பாத்திரம்? நான் கொடுத்த ஓடுதான் எனக்கு வேண்டும்!" என்று அவர் வற்புறுத்தினார்.

திருநீலகண்டர் எத்தனையோ கெஞ்சியும் வற்புறுத்தியும் சிவனடியார் விடவில்லை.

"உன் மகனைக் கூப்பிட்டுச் சத்தியம் செய். நான் நீ சொல்வதை ஒப்புக்கொள்கிறேன்" என்றார் பெருமான்.

"எங்களுக்குக் குழந்தைகள் இல்லை, சுவாமி."

"வேண்டாம்; மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு சத்தியம் செய்; அது போதும்" என்றார்.

திருநீலகண்டரால் அதற்கும் இணங்க முடியவில்லை. மனைவியும் அவரும்தான் மெய் தீண்டுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறார்களே!

சிவனடியார் அவரைத் திருடன் என்று குற்றம் சாட்டி, தில்லை வாழ் அந்தணர்தம் அவை முன்னே அவரைக் கொண்டுபோய் நிறுத்தினர். "ஓடு தொலைந்து விட்டது என்கிறான். மனைவியின் கையைப் பிடித்துச் சத்தியம் செய்யட்டும்; விட்டுவிடுகிறேன் என்றால் மனைவியைத் தீண்டுவதில்லை என்று கூறுகிறான்.



இவன் பெரிய திருடன். மனைவியின் கையைத் தீண்டாத கணவன்கூட உண்டா?" என்று தம் கட்சியை எடுத்துரைத்தார் அவர்.

"மனைவியின் கையைப் பிடித்து, நீரில் மூழ்கிச் சத்தியம் செய்ய வேண்டும்" என்று பேரம்பலச் சபையில் தீர்ப்புக் கூறினர்கள்.

திருப்புலீச்சுரம் என்னும் சிவாலயத்தின் முன்னிருக்கும் திருக்குளத்தில் அவர்கள் மூழ்கவேண்டும் என்று முடிவு. ஆயினும் திருநீலகண்டர் சத்தியத்தைக் கைவிடாதவராக ஒரு மூங்கில் குச்சியை எடுத்து அதன் மறுபுறத்தை மனைவியிடம் கொடுத்துப் பிடித்துக் கொள்ளச் சொன்னர். அந்தணர்கள் யாவரும் மனைவியின் கையைப் பற்றி மூழ்கவேண்டும் என்று கூறினர்கள். ஆனால் திருநீலகண்டர், இறைவன் பெயர்மீது ஆணையிட்டிருப்பதால் அவ்விதம் கையைத் தொட முடியாமல் இருப்பதைக் கூறினர். பிறகு மூங்கிலைப் பிடித்த வண்ணம் இருவரும் நீரில் மூழ்கி எழுந்தார்கள். ஆனல் என்ன விந்தை! முதுமைக் கோலத்தோடு மூழ்கியவர்கள் இளமைக் கோலத்தில் எழுந்து நின்றார்கள். அதே சமயத்தில் அங்கே சிவனடியார் கோலத்தில் நின்ற சிவபெருமான் மறைந்து விட்டார். அனைவரும் திருநீலகண்டரின் நெறியையும் பெருமையையும் கண்டு பரவசம் கொண்டார்கள். இளமைக் கோலத்திலேயே திருநீலகண்டரும் அவர் மனைவியாரும் சிவபதம் பெற்றனர். ஐம்புலன்களையும் அடக்கி அமரரான பெரியார் திருநீலகண்ட நாயனர்.

பேய் காத்த பேழை!

'ஆர்வி'

1

முருகேசன் பேசிப் பேசிச் சளைத்துப் போனான். கடைசியாகப் பொறுமையை இழந்து, ''சரி; பூதம், பேய், பிசாசு - இவையெல்லாம் உண்டு என்று நீ நம்புகிறாயா, இல்லையா?'' என்று கேட்டான்.

''நானா?-'' என்று ஏளனக் குரலில் சிரித்தான் குமரேசன். ''நல்ல ஆள் பார்த்தாயே, இந்தப் பேத்தல்களையெல்லாம் நம்புவதற்கு?'' என்று கூறிவிட்டு, பெரிய வீரனைப்போல் சுற்றி அமர்ந்திருந்த நண்பர்கள் எல்லாரையும் ஒருமுறை கம்பீரமாகப் பார்த்தான்.

மற்றவர்கள் எல்லாரும் இது பற்றி ஒரு முடிவு கட்டுவதற்குக் குமரேசனையே எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஏனெனில் பாலூர் மாணவர் விடுதியில் அவனே மற்றவர்களைவிடப் பெரியவன். பல ஊர்களைச் சுற்றிப் பார்த்து விட்டுப் புதிதாக வந்து சேர்ந்தவன். மற்ற மாணவர்களைவிட அதிக விஷயங்கள் தெரிந்தவன். அவனுடைய ஆசிரியர்கள் பார்க்காத இடங்களையெல்லாம் கூட அவன் பார்த்திருக்கிறான். அதனால் அங்கே கூடியிருந்த நண்பர்கள் அவன் சொல்வதை மறுத்துப் பேச விரும்பவில்லை.

குமரேசன் கட்சியே சரியென்று அவர்களுக்குத் தோன்றியது. இருந்தாலும் உள்ளூற ஒருவித நடுக்கம் அவர்களுக்கு உண்டாகாமலும் இல்லை.

இந்தப் பேய், பிசாசு விஷயமாக அவர்கள் எத்தனையோ முறை காரசாரமாக விவாதம் செய்திருக்கிறார்கள். எத்தனையோ பயங்கரமான கதைகளையெல்லாம் கூறக் கேட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடந்திருக்குமா என்ற அவநம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள். பேய், பிசாசு இவற்றை நம்புவது குருட்டுத்தனம் என்று மேலுக்குப் பேசுவது பெருமையாக இருந்தது. ஆனால் அது எப்படிக் குருட்டுத்தனம் ஆகும் என்று அவர்களால் ஆராய்ந்து அறிந்து கொள்ளவும் முடியவில்லை. தைரியசாலிபோல் பேசுவது சுலபம்; ஆனால் தைரியசாலிபோல் நடந்துகொள்வது கடினம் என்பது அவர்களுக்கே தெரியும். ஆயினும் பொதுவாகக் குமரேசன் கட்சியை ஒப்புக் கொள்கிறவர்களை யாரும்

கோழைகள் என்று குற்றம் சாட்ட முடியாதல்லவா?

முருகேசன் தன் கட்சிக்கு இங்கே ஆதரவு குறைவு என்பதைத் தெரிந்துகொண்டான். விளக்கு வைத்து விட்டால் துணைக்கு ஆள் கூப்பிடும் துரைசாமிகூட இன்று குமரேசனுடன் சேர்ந்து கொண்டு, ''பேயாவது பூதமாவது - பேத்தல்!'' என்று முழக்கினுன்.

''சரி, உனக்கு இதில் நம்பிக்கை யில்லை. ஆனுல் நான் இதை நம்புகிறேன்! இருட்டுகிற சமயமாகிவிட்டது. இந்த நேரத்துக்குமேல் இந்தப் பக்கம் யாருமே போகமாட்டார்கள். அதனுல் திரும்புவோம்; புறப்படுங்கள்!'' என்ருன் முருகேசன்.

''ஆமாம்டா! இருட்டுவதற்கு முன்னுலே போய் விடலாம்டா!'' என்ருன் துரைசாமி.

''என்னப்பா, து, து! என்னமோ வீரன்போலத் துள்ளினுயே. அப்படி வா, உன் சொந்த வழிக்கு!'' என்று பழித்தான் ஜகதீசன்.

''து. து. என்ருல் என்னடா?''

''அதுவா, துஸ்கொயர்டு! துடை நடுங்கி துரைசாமி என்று அர்த்தம். து-து-''

எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். அவர்களுடைய சிரிப்பு அந்த வெளியைக் கடந்து, எதிரே தெரிந்த பாழடைந்த மாளிகை வரையில் போய் எதிரொலித்தது.

அந்த எதிரொலி நின்றதும், ''முருகேசா! யார் நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி; நான் அதை நம்பத் தயாராக இருக்கிறேன். ஏன் தெரியுமா? அதோ, அந்தப் பாழடைந்த மாளிகைதான் அதற்குக் காரணம். அதன் கதையைக் கேட்ட பிறகு யாரும் பேய், பிசாசு என்று இருப்பதை மறுக்க முடியாது!'' என்று நிதானமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் பேசினுன் அழகேசன்.

மறுபடியும் இந்தப் பேச்சுத்தானு என்று அஞ்சுவதுபோல் துரைசாமி அவனை ஏக்கத்தோடு பார்த்தான். எல்லாருக்கும் பின்னுல் போய் நிற்க அஞ்சி, நாலு பேருக்கு நடுவில் வந்து புகுந்து நின்று கொண்டான் துரைசாமி.

''எனக்கும் தெரியும் அந்தக் கதை. அதனுல்தான் சொல்கிறேன்!'' என்ருன் முருகேசன்.

''உனக்குத் தெரிந்தால் போதுமா? எங்களுக்கும் தெரியும்படித்தான் சொல்லேன்; கேட்போம்!'' என்ருன் குமரேசன்.

''டேய், டேய், இங்கே வேண்டாம்டா! ஹாஸ்டல் வார்டன் திட்டுவார். அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம். நேரமாகி விட்டது!'' என்ருன் துரைசாமி.

நேரமாகிவிட்டது என்னவோ உண்மைதான். சூரியன் மலைக் குன்றுகளுக்குப் பின்னுல் இறங்கி விட்டான். புருக்கூட்டம் பாழடைந்த மாளிகையைச் சுற்றிப் பறந்து, மாடங்களிலே பதுங்கத் தொடங்கியது. தன் கரிய சலாகையால் சவுக்குத் தோப்பைக் கருமையாக்கிப் பூசியது இருள். 'ஙொய், ஙொய்' என்று சவுக்கு மிளாறுகள் காற்றிலே பயங்கரமாக ரீங்காரமிட்டுச் சீறி அச்சுறுத்தின. அந்தப் பயத்தில் துரைசாமியின் உடல் மட்டுமல்ல, உள்ளமே நடுங்கியது.

''அதோ!'' என்று தூரத்திலே மலைச்சரிவில் இருந்த பழங்கால மண்டபம் ஒன்றைச் சுட்டிக் காட்டினுன் அழகேசன்.

எல்லாரும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

''அதுதான் பண்டாரத்தார் மண்டபம்! இப்பொழுது அது பின் பகுதியெல்லாம் இடிந்து பாழுற்றுக் கிடக்கிறது'' என்று அதற்கு விளக்கம் கூறினுன் முருகேசன்.

''து. து. உனக்குப் பயமாக இருந்தால் நீ, முன்னுல் போ! நாங்கள் எல்லாரும் முருகேசன் கதையைக் கேட்டுவிட்டு வருகிருேம்!'' என்று பரிகாசமாகக் கூறினுன் ஜகதீசன்.

முன்னுல் தனியாகப் போகவும் துணிவில்லாமல் அங்கே இருந்து கதை கேட்கவும் பயந்து தடுமாறினுன் துரைசாமி.

''எனக்குச் சரியாகச் சொல்ல வராது. அழகேசன்தான் நிதானமாகச் சொல்வான். அவனே

சொல்லட்டும்!'' என்றான் முருகேசன்.

அழகேசன் தொண்டையைக் கனைத்துக்கொண்டான்.

2

அந்தப் பண்டாரத்தார் மண்டபத்துக்கும் இந்தப் பாழடைந்த மாளிகைக்கும் இப்பொழுது யாருமே போவதில்லை. காரணம், இப்பொழுது மனிதர்கள் யாரும் அந்த இடங்களில் வசிக்கவில்லை. அது மட்டுமல்ல, அந்த இரண்டு இடங்களிலும் பேய்கள் நடமாடுகின்றன; அதனால்தான்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே என் மாமா சொன்னதிலிருந்து சொல்கிறேன்—அங்கே பாலூர் ஜமீன்தாருடைய கோட்டையாக இருந்தது இந்த மாளிகை. அப்பொழுதும் இந்தப் பக்கம் யாரும் துணிந்து அடியெடுத்து வைக்க மாட்டார்களாம். ஜமீன்தார் பெயரைக் கேட்டாலே சுற்று வட்டாரத்திலுள்ளவர்களுக் கெல்லாம் குலை நடுக்கம்தானும். அவர் அத்தனை பொல்லாதவர். அப்போது ஆண்ட வெள்ளைக்காரர்கள் அவருடைய சம்ஸ்தானத்தைக் கடனுக்காகப் பிடுங்கிக்கொண்டு விட்டார்களாம். ஆயினும் ஜமீன்தார் கைக்குள் எதற்கும் துணிந்த நூற்றுக் கணக்கான முரட்டு ஆட்கள் இருந்தார்கள். அத்தனை பேருக்கும் பிழைப்பு வேண்டுமே! அங்கங்கே இருந்த பக்கத்து ஜமீன்களுக்குப் போவது; மிரட்டுவது; அகப்பட்டால் கொள்ளையும் அடிப்பது என்று இப்படியே அவர் பொருள் சேர்த்து வந்தார். இதற்கெல்லாம் வசதியாகச் சொந்தத்தில் ஓர் இருப்பிடம் என்று இருக்கவேண்டாமா? அதற்காக மலைகளும் காடுகளும் சூழ்ந்த இந்த இடத்தை அவர் தேர்ந்தெடுத்தார். இப்போதல்லவா இது பாடசாலை அமைக்கும் ஊராக விளங்குகிறது! அப்போது அந்தப் பண்டாரத்தார் மண்டபம் ஒன்றுதான் இந்தப் பகுதியில் இருந்தது.

ஜமீன்தார் முதலில் பண்டாரத்தார்கள் இங்கே இருப்பதை அறிந்துகொள்ளவில்லை. பிறகுதான் தெரிந்து கொண்டார். அவர்கள் கேவலம் ஆண்டிப் பண்டாரம் தானே என்று அலட்சியமாக இருந்துவிட்டார், ஆனால் போகப் போகத்தான், அந்தப் பண்டாரத்தாரைத் தேடிக்கொண்டு எங்கெங்கிருந்து எல்லாமோ மனிதர்கள் வருவதும் காணிக்கைகள் குவிவதும் அவருக்குத் தெரிந்தன. அவர்களால் தமக்கு இடையூறு ஒன்றும் ஏற்படாது என்று அவர் எண்ணியதால் அவர்களை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவருடைய கொள்ளை

களும் தாக்குதல்களும் குறைவின்றி நடந்துகொண் டிருந்தன.

ஆனால் அதற்கும் ஒரு சோதனைக் காலம் வந்துவிட்டது. எங்கும் பஞ்சம் தலைவிரித்தாடியதால் ஜமீன்தாரால் வழக்கம்போல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நூற்றுக் கணக்கானவர்கள் பிழைக்க வேண்டுமே! கொள்ளையடித்த பொருள்களை யெல்லாம் விற்று, மாற்றி அவர்களைக் காப்பாற்றி வந்தார். இவருடைய கொட்டத்தை அடக்க, வெள்ளைக்காரர்கள் சரியான சந்தர்ப்பத்தை வேறு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். அதனால் அந்த முரட்டு ஆட்களையும் விட்டுவிட முடியவில்லை.

இந்தச் சமயத்தில்தான் அந்தப் பண்டாரத்தாரிடம் குவிந்துள்ள செல்வத்தைப் பற்றி அவருக்குத் தெரியவந்தது. ஆண்டிகளுக்கு ஆஸ்திகளும் ஆபரணங்களும் ஏன் என்று கேலியாகக் கூறி, அங்குள்ள பொருள்களைச் சூறையாடி வருமாறு ஐந்தாறு ஆட்களை ஏவிவிட்டார் ஜமீன்தார்.

அந்த ஆட்கள் அங்கே போனபோது காவலுக்கு ஒரே ஒரு பண்டாரம் மட்டும்தான் இருந்தார். மற்றவர்கள் வெளியூர்களில் வசிக்கும் பக்தர்களின் அழைப்புக்கு இணங்கி, விஜய யாத்திரை போயிருந்தார்கள்.

சரியான சமயம். ஐந்தாறு முரடர்களும் அந்த ஒரே பண்டாரத்தைப் பிடித்துக் கட்டி மலையிலிருந்து உருட்டித் தள்ளிவிட்டு, அங்குள்ள அளவற்ற திரவியங்களை அபகரித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அதிலே நவரத்தினபரணங்கள் அடங்கிய பேழை ஒன்றும் இருந்தது. அதையெல்லாம் பார்த்த ஜமீன்தார் அப்படியே திகைத்துப் போய்விட்டார். நூறு ஆண்டுகள் சேர்த்தாலும் சேகரிக்க முடியாத அளவு விலையுயர்ந்த பொருள்கள் அவர்களிடம் இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவே யில்லை. அந்த எதிர்பாராத அதிருஷ்டத்தைக் கண்டு அவர் கவலை நீங்கினார்.

விஜய யாத்திரையிலிருந்து திரும்பிய பண்டாரத்தார் நடந்ததை ஊகித்துத் திடுக்கிட்டார்கள். அவர்களுக்கும் ஆள் படைகளும் வேறு பல வசதிகளும் ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருந்ததால், பக்கத்திலிருந்த ஜமீனுக்குச் சொல்லி யனுப்பினார்கள். அங்கிருந்து அவர்களுடைய பாதுகாப்புக்காக ஒரு சிறு படையே வந்தது. அந்தப் படையின் தலைவன் பாலூர் ஜமீன்தாரை எதிர்க்கத் தன் படை போதாது என்று கண்டான். இதைத் தந்திரமாகச் செய்யவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு, ''அந்தப் பொருள்களில் முக்கியமானது எதுவோ, அதைச் சொல்லுங்கள். நான் எப்படியாவது இங்கே முதலில் அதைக் கொண்டுவந்து சேர்த்து விடுகிறேன்'' என்றான்.

''அந்த நவரத்தினபரணம் அடங்கிய பேழை ஒன்று கிடைத்தாலே போதும்; மற்றவற்றைப்பற்றிக் கவலையில்லை. சோழ அரசர் சம்மானம் செய்த அந்தப் பொருள் பல தலைமுறைகளாக இங்கே இருந்து வருகிறது'' என்றார்கள் பண்டாரத்தார்.

அன்று பௌர்ணமி. நிலவு இந்தப் பள்ளத்தாக்கைப் பாற்கடல் போல் ஆக்கிக்கொண் டிருந்தது. ஜமீன் மாளிகை பளிங்குமண்டபம் போல் விளங்கியது. அங்கிருந்த ஆட்கள் நிலா நாட்களிலே காடுகளில் களிப்போடு சுற்றித் திரிவார்கள் என்பதை அறிந்துகொண் டிருந்த படைத் தலைவன் மழவராயன் இரும்புக் கவசங்கள் அணிந்துகொண்டான். வாளும் கேடயமும் ஏந்திக்கொண்டான். தன்னுடைய போர்க்கோலம் வெளியே பார்த்தால் தெரியாதவாறு ஒரு பெரிய கறுப்புச் சால்வையை எடுத்துத் தலைமுதல் கால் வரையில் போர்த்துக் கொண்டான். மெல்ல மெல்லப் பதுங்கி, நடுச்சாம நேரத்தில் ஜமீன் மாளிகைக்குள் நுழைந்துவிட்டான்.

காவலாளர்கள் மது வருந்தி அந்த மயக்கத்தில் குறட்டை விட்டுக்கொண் டிருந்தார்கள். மழவராயன் சிறிதும் தயங்காமல் பூனை போல் அடிமேல் அடி எடுத்து வைத்து, நவரத்தினபரணப்பேழை

யைக் கண்டு பிடிக்க ஒவ்வோர் அறையாக நுழைந்து வந்தான். மாடங்களையும் கூடங்களையும் தாண்டி, பல பாசறைகளையும் சயன மஞ்சங்களையும், மண்டபங்களையும் கடந்து பொக்கிஷச் சாலையைக் கடைசியாக அடைந்தான். ஆனால் அங்கே மட்டும் முன் பக்கத்தில் இருந்த காவலாளிகள் விழித்திருந்தபடியால், பக்கத்திலே இருந்த இருண்ட பகுதி வழியாக உள்ளே நுழைய முயன்றான். கீழே நிலைப்படி இருப்பது தெரியாமல் காலை வைத்து இடறி விழுந்தான். அவன் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டுவிட முயன்றும் அவன் கையிலிருந்த கேடயம் கீழே விழுந்து, உருண்டு பேரொலி ஒன்றைக் கிளப்பியது. அடுத்த கணம், மழவராயன் காவலாளிகள் கையிலே எதிர்பாராத வகையில் சிக்கிக்கொண்டு விட்டான்!

அப்புறம் கேட்க வேண்டுமா? காவலாளி ஒருவன் தன் உடைவாளை உருவி அவன் மார்பிலே பாய்ச்சி விட்டான்.

அவனுடைய ஆவிதான் பேயாக இன்னும் அந்தப் பாழடைந்த மாளிகையிலே நவரத்தினாபரணப் பேழையைத் தேடிச் சுற்றிச் சுற்றி அலைகிறது. ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் அந்த மாளிகையை நோக்கி ஒரு பேயுருவம் வருவதையும் மாளிகையின் ஒவ்வொரு பாகத்திலும் நுழைந்து வெளிப்படுவதையும் பிறகு பொக்கிஷச் சாலை யிருந்த அறைவாயிலிலே வந்து உருண்டு விழுவதையும் காணலாமாம். இதைப் பலரும் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறார்களாம்.

மனிதன் ஆசாபங்கத்தோடு உயிர் துறக்க நேர்ந்தால், அது நிறைவேறும் காலம் வரையில் அவனு

டைய ஆவி பேயாக உலவி வரும் என்ற ஒரு நம்பிக்கையை மழவ ராயன் ஆவி உறுதிப்படுத்தி விட்டது. அன்று முதல் யாரும் அந்தப் பக்கமே தலைகாட்டுவதில்லை. அதுவும் பௌர்ணமி அன்று கால்நடைகளைக்கூட அந்தப் பக்கம் அவர்கள் விடுவதில்லை. ஏனெனில் விஷயம் தெரியாமல் அந்தப் பக்கம் போனவர்கள் மறுபடி உயிரோடு மீண்டு வந்ததில்லை.

இந்த மாளிகையில் பௌர்ணமி அன்று மழவராயன் ஆவி உலவுவது போலவே, மலையடிவாரத்தில் ஏறக்குறைய அதே நேரத்தில் மற்றோர் உருவம் அலைவதையும் சிலர் பார்த்திருக்கிறார்கள்.

அது யார் என்பதை நீங்கள் ஊகித்திருக்கலாம். அதுதான் காவல் இருந்த அந்தப் பண்டாரத்தின் ஆவி.

இந்தச் சீமையிலே வீரர்களுக்கும் அறிவாளிகளுக்கும் பஞ்சமில்லை. ஆயினும் அவர்கள் எல்லாரும் இந்தக் கதையைப் பொய், பேத்தல் என்று தள்ளிவிடவில்லை. அறியாமை என்று நகையாடவில்லை. கோழைத்தனம் என்று எள்ளிப் புரளி செய்யவில்லை. நானும் அவர்களைப்போலவே இதை நம்புகிறேன். ஐயப்படுபவர்கள் அடுத்த பௌர்ணமி அன்று அங்கே போய்ப் பார்த்துக்கொள்ளலாம்.

அப்புறம் ஜமீன்தார் என்ன ஆனார்? பண்டாரத்தார் என்ன ஆனார்கள் என்பதுபோல் நீங்கள் பார்க்கிறீர்கள்! அதெல்லாம் எதற்குப் பழைய கதை? மழவராயன் கொலையுண்ட செய்தி பண்டாரத்தார்களுக்குத் தெரிந்தது. அவர்கள் ஆத்திரம் கொண்டார்கள். உடனே ஜமீன்தாரைப் பற்றிய உளவை வெள்ளைக்காரர்களுக்குத் தெரிவித்துவிட்டார்கள். அவர்கள் இம்மாதிரி வெள்ளைக்காரர்களுக்குத் தகவல் தந்தது ஜமீன்தாருக்குத் தெரிந்தது. அவர் உடனே தம் ஆட்களோடு வந்து பண்டாரத்தாரை அடியோடு அழித்தார். அழித்துவிட்டுத் திரும்பிய அவர்களை வெள்ளைக்காரர்கள் சூழ்ந்து பிடித்து அழித்தார்கள்.

இதெல்லாம் நமக்கு ஏன் வீண் விவரங்கள்? பேய், பிசாசு உலவுவது உண்மையா இல்லையா என்பதுதானே இன்று முக்கியம்?

அப்படிப் பார்க்கப் போனால் அந்த மாளிகை, இப்பொழுது நம்முடைய குருகுலத்தை நடத்துகிறாரே - அவருடைய தந்தையால் ஏலத்தில் எடுக்கப்பட்டது என்பதுகூட நமக்கு அவசியமில்லை தான். அந்த மாளிகையினால் இப்பொழுதுள்ள குருகுலத் தலைவருக்கு என்ன பயன்? ஆற்றையடுத்த இயற்கைச் சோலையில் அல்லவா அவர் நமக்குப் பள்ளிச் சாலையும் உணவுச் சாலையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்! பேய் உலவாத மாளிகை என்றால் அதை நம் மாணவர் இல்லமாக மாற்றியிருக்கமாட்டாரா?

3

அழகேசன் கூறிய கதையை அனைவரும் வாய் திறவாமல், மூச்சுக்கூட விடாமல் கேட்டார்கள். குமரேசன் நெஞ்சத்தில் மட்டும் ஏதோ ஓர் அவநம்பிக்கை இழைந்து கொண்டிருந்தது. 'துடை நடுங்கி' துரைசாமியின் பற்கள் கடகட வென்று தந்தியடித்தன. இருந்தாற் போலிருந்து அவன் சற்றுத் தூரத்தில் எதையோ பார்த்துவிட்டு, ''ஹோ!'' என்று உளறியடித்துக்கொண்டு கூவினான்.

''அதோ—பேய்! பிசாசு!'' என்று அழுதவாறே உளறினான். அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் பார்க்கும் முன்னரே ஓர் உருவம் சவுக்குத் தோப்பினுள்ளே புகுந்து இருளிலே கலந்து மறைந்துவிட்டது.

''சீச்சீ! சுத்தப் பயந்தாங் கொள்ளியடா இவன்!'' என்று அனைவரும் துரைசாமியைக் கண்டித்தார்கள்.

''இல்லை; நான் ஓர் உருவம் அசைந்து செல்வதைப் பார்த்தேன்!'' என்று சாதித்தான் துரைசாமி. அவன் சொல்வதை யாராவது நம்பத் தயாராக இருந்தால் தானே! ''அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்;

இல்லையா?'' என்று கேலி செய்தான் ஜகதீசன்.

4

''அழகேசா! நீ சொன்ன கதை உண்மையான கதையா?'' என்று கேட்டான் முருகேசன்.

''பின்னே உனக்கும் தெரியும் என்றாயே!''

''இந்தக் கதையை நான் இது வரையிலும் கேள்விப் பட்டதேயில்லை. நான் சொல்ல வந்தது வேறு கதை. அவர்கள் நம்பும்படி ஏதாவது ஒரு கதை சொல்லலாம் என்று நினைத்தேன். அவ்வளவு தான்!''

அழகேசன் சிரித்தான்.

''இதை என் மாமாவும் சொல்லவில்லை; வேறு யாரும் சொல்லவில்லை. பாழடைந்த மாளிகையையும் பண்டாரத்தார் மண்டபத்தையும் பார்க்கும்போதெல்லாம் இந்த இரண்டையும் வைத்து ஒரு கதை கட்டவேண்டும் என்று எனக்கு ஆவல் உண்டாகும். அந்த ஆவல் இன்று நிறைவேறி விட்டது.''

''துரைசாமி அப்படியே இதைக் கேட்டு நடுங்கிவிட்டானே!''

''அத்துடன் மட்டுமா? குமரேசனும் அப்படியே நம்பி விட்டானே!''

''ஆனால் இது இத்துடன் போகும் என்று தோன்றவில்லை. குமரேசன் இருக்கும் மாதிரியைப் பார்த்தால் எனக்கு என்னவோ கவலையாக இருக்கிறது. என்றைக்குப் பௌர்ணமி என்று அவன் ஹாஸ்டல் வார்டனையே போய்க் கேட்டு வைத்துக்கொண்டிருக்கிறான். இருந்தாலும் சிறுவர்களுக்கு இந்த மாதிரிக் கதைகள் கட்டிச் சொல்வது சரியல்ல!'' என்றான் முருகேசன்.

சிரித்தான் அழகேசன்.

5

அன்று பௌர்ணமி. முருகேசன் அவசர அவசரமாக அழகேசனை எழுப்பினான்.

''அதோ பார்!'' என்று குமரேசன் படுக்கையைக் காட்டினான்.

அழகேசன் கண்களைக் கசக்கிக் கொண்டு படுக்கையைப் பார்த்துத் திடுக்கிட்டான். படுக்கையில் குமரேசனுக்குப் பதிலாக ஒரு தலையணைதான் படுத்துக் கிடந்தது. விஷயம் புரியாமல், ''என்ன நடந்தது?'' என்று அரைத் தூக்கக் கலக்கத்தோடு கேட்டான் அழகேசன்.

''குமரேசன் இன்று மாலை முதலே சரியாக இல்லை. எனக்கு என்னவோ சந்தேகமாக இருந்தது. தூங்காமல் விழித்திருக்க வேண்டும் என்று படுத்திருந்தேன். ஆனால் எப்படியோ கண்ணயர்ந்து விட்டேன். சட்டென்று விழித்துப் பார்த்தால் குமரேசனைக் காணவில்லை. இப்பொழுதுதான் அவன்

மூளைக்கு வேலை: (விடைகள்)

சென்ற இதழில் இந்தப் பகுதியிலுள்ளதற்குச் சரியான விடை கீழே உள்ளது.



இந்த இதழுக்குரிய விடை சென்ற இதழில் வந்துள்ளது.

கிளம்பிப் போயிருக்கவேண்டும். எழுந்திரு; புறப்படுவோம்.''

''எங்கே?''

''பாழடைந்த மாளிகைக்குத்தான்!''

அழகேசன் திடுக்கிட்டான். ''உண்மையாகவா?'' என்றான். அவன் குரல் நடுநடுங்கியது.

''உன் கதைதான் பொய்க் கதை ஆயிற்றே. என்ன பயம் உனக்கு?''

''இருந்தாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. இராக் காலத்தில் நாம் அங்கெல்லாம் போகலாமா?''

''ஆனால், எல்லாம் நம்மால் வந்த வினைதானே! நாம்தான் அவனுக்குத் துணை செல்லவேண்டும். இல்லாவிட்டால் ஹாஸ்டல் வார்டன் நாளைக்கு நம்மைத்தான் பிடித்துக்கொள்வார். மேலும், நாம் மூன்று பேர்தானே இந்த அறையில் இருக்கிறோம். தெரிந்தும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யாமல் வேடிக்கை பார்க்கலாமா? அல்லது பயந்துதான் பின் வாங்கலாமா?''

அழகேசன் தயங்கியவாறு, ''சரி; போவோம், இப்பொழுது மணி என்ன இருக்கும்?'' என்றான்.

''மணி பன்னிரண்டு.''

அழகேசனும் முருகேசனும் ஹாஸ்டல் கதவைத் திறந்துகொண்டு பகல் போல் எரியும் நிலவொளியிலே அடியெடுத்து வைத்தார்கள். நெஞ்சு துணுக்குற்றது. நிலவே நிழலாட்டம் காட்டி அச்சுறுத்தியது. ஊர் உறங்கும் நடுச்சாமத்தில் எங்கோ ஒரு நரியின் ஊளை கேட்டது. வெள்ளைப் புகை மூட்டம் போவது போன்ற மலைக் குன்றுகள் மனிதர்களின் அறியாமையைப் பழிப்பதுபோல் அசையாமல் நின்றன. ஆயினும் அவர்கள் குமரேசன் நிலை கருதி ஓட்டமும் பெருநடையுமாகப் பாழடைந்த மாளிகையை நோக்கிச் சென்றார்கள்.

''இப்படிச் செய்வான் குமரேசன் என்று நான் நினைக்கவேயில்லை! அவனுடைய துணிச்சலைக் காட்ட இந்தக் காரியந்தானா அகப்பட்டது?'' என்று அழகேசன் மூச்சு இரைக்கக் கூறினான், மாளிகையைப் பார்க்கப் பார்க்க, நெஞ்சு அத்தனை படபடத்தது. எந்தக் காலத்திலோ கட்டப்பட்ட மாளிகை!

இருவரும் மாளிகையின் முன் பகுதியை மெல்ல அடைந்தார்கள். இருளில் ஆழ்ந்து சிதிலமாகிக் கிடந்த அந்த முன் பகுதியில் ஒரே நெடியும் குடலைப் புரட்டும் துர்வாடையும் கலந்து வீசின.

மூக்கைப் பிடித்துக்கொண்டே நண்பர்கள் இருவரும் ஆசார வாயிலை அடைந்தார்கள். இந்தச் சந்தடியில் மாடத்துப் புறாக்கள் சடசட வென்று இறக்கைகளைச் சொடுக்கின. தூரத்தில் தவளைகள், 'கடகடாக்-கொடகொடாக்' என்று பெரிதாக மண்டை வீங்கக் கத்தின. 'ஙொய்' என்று கதண்டுகள் முகத்தைத் தாக்குவதுபோல் ரீங்காரமிட்டுப் பறந்தன.

முருகேசனுக்குக் குரலே எழும்பவில்லை. ஆயினுங்கூட அழகேசன் இருக்கும் தைரியத்தினால், ''குமரு! குமரு!'' என்று கூவியழைத்தான். அந்தச் சத்தம் காற்றாகத்தான் எழும்பியது. வெகுதூரம் அது கேட்டிருந்தால் எதிரொலி கிளம்பியிருக்காதா?

ஆயினும், "யார் அது?" என்று கணீரென்று எதிரொலியோடு ஒரு குரல் வெகு அருகில் கேட்டது.

"நாங்கள்தான் — முருகு, அழகு!"

"இப்படி இடது பக்கமாக வாருங்கள்!" - குரல் இப்போது கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் கேட்டது.

முருகேசனும் அழகேசனும் இடது பக்கமாகத் திரும்பிப் பாய்ந்தார்கள். நீண்ட குகை போல் இருந்த இடத்தில் குமரேசன் சுவரோடு ஒண்டிக் கொண்டு நின்ருன்.

"என்னடா?" என்ருன் அழகேசன்.

"ஸ்...சத்தம் போடாதே! குகை வழியாக அதோ பார்!" என்ருன் குமரேசன்.

மூவரும் அந்தக் காட்சியைப் பார்த்தார்கள். அவர்களால் தம் கண்களேயே நம்ப முடியவில்லே. அங்கே அழகேசன் வர்ணித்த படியே அந்த நிழலொளியில் ஓர் உருவம் தலேமுதல் கால்வரை மூடிக்கொண்டு நிற்பது தெரிந்தது. மூவருக்கும் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. தம்மை அறியாமலே ஒருவர் கையை ஒருவர் கெட்டியாகப் பற்றிக்கொண்டு, அந்த உருவத்தின்மீது வைத்த கண் வாங்காமல் நின்ருர்கள்.

"மழவராயன் ஆவி!" என்ருன் குமரேசன்.

"ஆ...மா.... ஆ ஆ..... மா...." என்று வாய் குழறக் கூறினுர்கள் மற்ற நண்பர்கள் இருவரும்.

நின்ற உருவம் இப்போது சிறிது அசைந்தது; அசைந்த உருவம் மெல்ல நடந்தது; நடந்த உருவம் பிறது குகையினுள் நுழைந்தது; வரவர முன்னேறி வந்தது; முன்னேக்கி வந்தது.

"மழவராயன் ஆவி பேழையைக் காவல் செய்கிறதோ?" என்று மூவரும் முனகியவாறே திசை தெரியாமல் ஓடினுர்கள். குறுக்கே குட்டைச் சுவர் ஒன்று குறுக்கிடவே அதன்மீது ஏறினுர்கள். ஆனல், என்ன துரதிருஷ்டம்! சுவரின் கற்கள் அடுக்கிய அட்டைப்பெட்டி ஆடி விழுவதுபோல் பொலபொலவென்று சரியத் தொடங்கின. குமரேசன் கால்கள் அதிலே சிக்கிக்கொண்டன. முருகேசன் அசையமுடியாமல் கற்கள் அவன் தோளே அமுக்கிக்கொண்டிருந்தன. அழகேசன் காலில் ஏதோ ஒன்று இடறியது. அவன் காலில் ரத்தம் கசிந்திருக்க வேண்டும்.

இதற்குள்—

நிலவொளி தெரிந்த குகை வழி கறுத்தது. காற்றுச் சலசலவென்று தரையைச் சீய்க்கும் ஒலி பலமாகக் கேட்டது. மூவரும் விஷயம் புரியாமல் ஏதோ நடக்கப்போவதாக எண்ணிக் காத்திருந்தார்கள்.

இருளில் பூதாகாரமாகத் தோன்றிய அந்த உருவம் இப்பொழுது அவர்கள் அருகேயே வந்துவிட்டது. அழகேசன் காலில் இடறிய கனமான பொருளே எடுத்து, முருகேசன் தோள்மீது

பேபி வத்ஸலா

சமீபத்தில் லக்ஷ்மிபுரம் இளேஞர் சங்க இருபதாம் ஆண்டு விழாவில் அற்புதமாக நாட்டியமாடி அனைவரையும் மகிழ்வித்தாள்.

விழுந்த கற்களைத் தள்ளி, குமரேசன் கையை உறுதியாகப் பிடித்து இடிபாடுகளிலிருந்து எடுத்துவிட்டு நின்றது.

மூவரும் பயம் தாளாமல் கண்களை இறுக மூடிக்கொண்டுவிட்டார்கள். எலும்பே உருகிப் போவதுபோன்ற பயத்தில் நெஞ்சு திகைக்க நின்றார்கள். சற்றுப் பொறுத்து யாரோ அவர்களை மெல்ல இழுத்துச் செல்வதுபோல் இருந்தது.

முன் முற்றத்தில் வந்து நின்றதும் நல்ல காற்று வீசியது. பிறகுதான் அவர்கள் மூவரும் கண்ணைத் திறந்தார்கள்.

எதிரே நிற்கும் உருவம் எது?

அவர்கள் உள்ளமே வெடித்து விடும்போல் இருந்தது.

கையிலே பிரம்போடு ஹாஸ்டல் வார்டன் அவர்களைக் கோபக் கனலோடு பார்த்துக்கொண்டிருந்தார்!

அவருடைய மற்றொரு கையிலே ஓர் இரும்புப் பேழை இருந்தது.

வார்டன் நிலவொளியிலே அதைச் சிரமப்பட்டுத் திறந்தார். துருப் பிடித்து மட்கிப் போயிருந்த அதன் மேல்மூடி சதக்கென்று பெயர்ந்து வந்துவிட்டது.

ஆனால், உள்ளே இருந்தவை ஒன்றும் மட்கிப் போகவில்லை. மதி நிலவிலே அதிலிருந்த ஆபரணங்கள் பளபளவென்று மின்னிக் கண்ணைப் பறித்தன.

''அழகு! சவுக்குத் தோப்பில் கூறிய கதையைப் பொய்யென்று எண்ணினேன். அந்தப் பொய்க் கதையை உண்மையென்று நம்பி, குமரேசன் பௌர்ணமியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்தேன்: நீங்கள் சிறுப்பிள்ளைத்தனமாக இதை ஆராய்ந்து பார்த்து விடத் துணிவீர்கள் என்றுதான் உங்களைப் பின்பற்றி வந்தேன். ஆனால் உண்மையாகவே பழங்காலத்துப் பேழை ஒன்று அகப்பட்டிருக்கிறதே! இதைக் குருகுலத் தலைவரிடம் ஒப்படைக்கு முன்னே இதற்காக உங்களில் யாரை நான் பாராட்டுவது?'' என்றார் வார்டன்.

''முருகேசனை!'' என்றான் குமரேசன்.

''குமரேசனை!'' என்றான் அழகேசன்.

''அழகேசனை!'' என்றார்கள் மற்ற இருவரும்.

''இல்லை, சார்! உங்களைத்தான் பாராட்டவேண்டும்; நீங்கள் வந்திரா விட்டால் நாங்கள் ஓடுவோமா! சுவர்தான் இடிந்து விழுமா? பெட்டிதான் நம் கைக்குக் கிட்டியிருக்குமா?'' என்றான் அழகேசன்.

''அப்படிப் பார்க்கப்போனால் து. து. வைத்தான் பாராட்டவேண்டும். அவன்தானே எனக்குச் சவுக்குத் தோப்பில் நடந்ததையெல்லாம் மறுநாள் வந்து சொன்னான்! ஆனால் எந்தக் காலத்திலோ இந்த மாளிகையில் வசித்தவர்கள் எதிரிகளுக்கு அஞ்சிப் புதைத்து வைத்திருந்த பேழை இன்று தற்செயலாகக் கிடைத்திருக்கிறதே. இதை எந்தப் பேய் காத்ததாகக் கூறுவது? பிறருடைய துரதிருஷ்டம் என்கிற பேய்தானே பிறருக்குக் கிடைக்காமல் இவ்வளவு காலம் காத்து வந்திருக்கிறது?'' என்று சிரித்தார் வார்டன். மற்றவர்களும் சிரித்தார்கள்.

விடைகள்

பொழுது போக்கு: 1. ஒற்றைச் சக்கர சைக்கிள், 2. கங்காரு என்னும் பிராணி, 3. ஆமை, திசைக்கருவி, குதிரை, கடல், துறைமுகம், தீபகற்பம், மாலுமி, கப்பல், புயற்காற்று, தீவு, பாய்மரம், காந்தமுள், திமிங்கிலம், முத்து, 4. காண்டா மிருகம், ஒட்டைச்சிவிங்கி, கோவேறு கழுதை, மரநாய், கழுதைப் புலி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் வெளியீடுகள்

தங்க மாம்பழம் - 'ராஜி' ரூ. 2·00

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்பதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

சைனா சு-சூ! - ஆர்வி ரூ. 1.50

பிளாட்பாரத்திலே பத்திரிகைகள் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனா சு-சூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் ரூ. 1·00

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி ந. பைசா 40

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்கு கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M. 5542